போன் நெ. 15. விலை 2 அணா REGD No.

திராவிடநாடு

மலர் 13 | 12—9—54 | இதழ் 11

வாழ்த்துகிறோம்! வரம் கிடைக்கிறது!!

[பரதன்]

நல்லவரே! நண்பரே! நாடாள வந்துள்ள நன்மனம் படைத்தோரே! மக்களாட்சியின் மாண்பினை மதித்திடும் மனப்பான்மை உள்ளவரே! மக்களின் குரல் கேட்டுக் குறை தீர்க்க முன்வரும் குணாளரே! உழைத்து உயரிடம் பெற்ற உத்தமரே! மாற்றுக் குறையாத மறத் தமிழரே! பாண்டிய மண்டலம் கண்ட பண்பாளரே! சீர்திருத்த வேட்கை கொண்ட செம்மலே! தொண்டர்தம் துயர் துடைக்கும் தூய்மையாளரே!!

வாழ்த்துகிறோம் இதுபோலவும், இதற்கு மேலாகவும்!

மகிழ்ந்தே வாழ்த்துகிறோம் — மனமார வாழ்த்துகிறோம் — மற்ற மற்றக்கட்சிக்காரர்கள், என்னென்ன கூறுகின்றனர், என்பதுபற்றிய கவலையுமற்று, உள்ளத் தூய்மையோடு வாழ்த்துகிறோம், பெருமைக்குரிய சொற்றொடரை மாலையாக்கி அணிவித்து மகிழ்கிறோம், சொந்தக் கட்சியினரும் சூட்டாத நல்லுரை மாலை தொடுத்து அணிவிக்கிறோம், அகம் களிக்கிறோம்! நாடே திடுக்கிடுகிறது, கட்சிகள் பலப்பல ஆச்சரியத்தால் வாய் பிளந்து நிற்கின்றன; நாம் இவ்விதம் புகழ் மாலைகளைச் சுமை சுமையாகத் தந்து, பூரித்து, வாழ்த்துவது கண்டு.

இடையக்கோட்டை தி. மு க., வாழ்த்துரைகளில், எல்லோரையும் மிஞ்சிடும் நிலை சென்று, வருங்காலத் திராவிடத்தின் முடிசூடா மன்னரே! வருக! என்று வாழ்த்தி வரவேற்கிறது.

தூ! தூ!! கண்ணீர்த் துளிகளின் போக்கே இதுதான் என்று பன்னீர்த் துளிகளின் பாதுகாவலர் பதவியை அமைத்துக்கொண்டு அதில் அமர்ந்தவண்ணம் (சம்பளத்தோடு தான்!!) அரசோச்சும் அன்பர் கூறிடமாட்டார். ஏனெனில், நூற்றுக்கணக்கான கழகக் கொடிகளை ஏந்திக்கொண்டு, வாடிப்பட்டி திராவிடர் கழகத்தோழர்கள், வரவேற்பு நடாத்தி வாழ்த்தி இருக்கிறார்கள்.

தி. க., தி. மு. க. இத்தகைய திருப்புகழ் பாடுகிறது!

திருஉலா நடாத்தும் திருவாளரே திகைக்கும் அளவுக்கு வாழ்த்துகிறோம்!

இவ்வளவு வாழ்த்துரைகளையும் பெறுபவர், முதலமைச்சர் காமராஜர்!!

வாழ்த்துகிறோம்! வரமும் கிடைக்கிறது! கிடைத்தவண்ணம் இருக்கிறது!!

தி. க., தி. மு. க. — வேறு எந்தக் கட்சியும் மேற்கொள்ளாத ஓர் அரும்பணியில் ஈடுபட்டுள்ளன!— முன்னது, பின்னதைக் குறை கூறுகிறது, ஆமாம்! ஆனால், தி. மு. க. தி. க.வின் பணி அதுமட்டும்தான் என்று கருதிவிடவில்லை, திராவிடத் திருநாடு காணும் அரும்பணி 'ஐந்தாறு சிறுவர்களை' அழித்திடும் அதிமுக்கியமான பணியைவிட. அவசியமானது, முக்கியமானது என்று எடுத்துக்காட்டியபடி இருக்கிறது. இரு கழகங்களுக்கும் இடையே உள்ள காதலும் மோதலும், எவ்வண்ணமிருப்பினும், இரு கழகமும் மேற்கொண்டுள்ள அரும்பணி ஒன்று இருக்கிறது, அதுவே திராவிடநாடு திராவிடருக்காதல்.

இந்த அரும்பணியை மதிக்கிறார், இதற்கான இலட்சியத்தை அறிந்து கொள்ள முயற்சிக்கிறார் என்பதற்காக அல்ல இவ்வளவு வாழ்த்துக்களும்!!

இந்த நம் இலட்சியத்துக்கு ஆக்கம் தராவிட்டாலும், இதனை அழித்துவிட முன்வரமாட்டார் என்ற உறுதி கிடைத்த பிறகு அல்ல, இவ்வளவு வாழ்த்துகளும்.

நீண்டகாலத் தொண்டுக்குப் பிறகு, நேர்மையான பொது வாழ்வில் பன்னெடுங்காலம் பங்கேற்ற பிறகு, செல்வம், குலப் பெருமை

பெரும் பத்திரிகைக்காரரின் விளம்பர வலிவு என்பனபோன்றவைகளை ஏணியாகக்கொண்டு உயரிடம் ஏறாமல், தாமாகவே படிப்படியாக முன்னேறி, பெரும் பதவி வகிக்கும் வாய்ப்பினைப் பெற்று, பெற்றதால் ஆர்ப்பரிப்பும் ஆர்ப்பாட்டமும் கொள்ளாமல், பொறுப்புணர்ச்சியும் அடக்கமும் அணிகலன் எனக்கொண்டு கோலோச்சுகிறாரே என்பதற்காகவே, வாடிப்பட்டி தி. க. வும் இடையக்கோட்டை தி. மு. க. வும் சொரிந்ததுபோன்ற வாழ்த்துக்களை, முதலமைச்சர் காமராஜர் பெறுகிறார்!

•

கிழமன்னன் ஓர் கடும் உத்தரவு பிறப்பித்தான், திடீரென்று—நாட்டிலே நாயகர்கள் என்று மதிக்கப்பட்ட நாலாறு பிரமுகர்களைச் சிறையில் அடை! சித்ரவதை செய்! பிறகு தூக்கில் போடு!!—என்று. காரணம் ஏதும் காட்டவில்லையாம்! ஊர் கொதித்தது! நல்லோர் மனமெலாம் அனலிடு மெழுகாயிற்று!! மக்கள் மனம் குமுறினர்! மன்னனை ஏசாதார் இல்லை! பாதகன் என்றனர், காதகன் என்றனர், மிருகம் என்றனர், மிலேச்சன் என்றனர்! ஒரே கொந்தளிப்பு!

மன்னன் மகனுக்கே மனம் எரிமலையாகிவிட்டது. "தந்தையே! இதென்னகாரியம்?" என்றுவெகுண்டுரைத்தான். "அனுபவமற்றவனே! எல்லாம் உன் நன்மைக்குத்தான்!! எனக்கோ வயதாகிவிட்டது! இனியும் ஆட்சிப் பீடத்தில் இருப்பதென்பது இயலாக் காரியம்! நீயன்றோ இனி அரசாளவேண்டியவன்! அரும்பு மீசையின் அழகிலும் கரிபரி ஏற்றக் கவர்ச்சியிலும், இசை நுகர்ச்சியிலும், இன்ப இரவுகளிலுமே நீ மனதைச் செலுத்தி வருகிறாய்! ஊர்மக்கள் இதை அறிவர்—மிக நன்றாக அறிவர்! ஆட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டிய நீ, ஊர் நிலையையோ, மக்களின் போக்கையோ, ஊராளும் முறையையோ, உருப்படியான திட்டத்தையோ கவனிக்காது, இடை நெளிவையும் கடைசிரிப்பையும் கண்டு கண்டே களியாட்டம் தனில் ஈடுபட்டு வருகிறாய், எனவே, ஆட்சிக்கு நீ வந்ததும், நாடு நலியும், நலம் குலையும், வளம் வரண்டொழியும், வாழ்வு இருண்டுவிடும், ஏதும்செய்ய இயலாது நீ, இருகை விரித்துக்காட்டுவாய், என்றெல்லாம், மக்கள், உன்னைப்பற்றிப் பேசிடக் கேட்டேன்! ஆளும் தகுதியும் திறமையும் உனக்கு இல்லை என்ற எண்ணம் எப்போது மக்கள் உள்ளத்திலே வேகமாகப் பரவிவிட்டதோ, அது பேராபத்தாகவன்றோ பின்னர் உருவெடுக்கும். எனவேதான் மகனே! உன்னை மக்கள் புகழ்ந்துகொண்டாடவும் பூரித்து வாழ்த்தவும், அகமகிழ்ந்து அடிபணியவும், சிரம் தாழ்த்திச் சேவை புரியவும், அன்பரே! நண்பரே! அறநெறி அறிந்தோனே! என்றெல்லாம் அர்ச்சிக்கவும், ஒரு வாய்ப்பு, ஒரு வழி செய்துவைத்திருக்கிறேன்! அடுத்த கிழமை உனக்கு முடிசூட்டுவிழா! நாள் குறித்துவிட்டேன், நாட்டவருக்கு நாளையத்தினம் அறிவிக்க இருக்கிறேன். நான் அடவி செல்வேன், அங்கு அதற்கான விடுதி தயாராகிவிட்டது! பட்டம் ஏறியதும், பாலகா! நான் பிறப்பித்த கொடிய உத்தரவை ரத்துசெய்! சிறைப்பட்ட சிலர்களை விடுதலை செய்! பார், பிறகு! வாழ்த்துகள் உன்னைத் தேடித்தேடிவந்து கொஞ்சும்! வறுமையை மறந்து, வாட்டமூட்டும் வாழ்க்கைச் சிக்கல்களை மறந்து மக்கள் உன்னை மகான் என்பர், மன்னரில் மாணிக்கம் என்பர், தருமத்தில் இவர்புத்தர்என்றுபுகழ்வர், தந்தைசெய்த கொடுமையினைத் துடைத்திட்ட தர்மசொரூபி, தயாபரன் என்பர், ஏதும் அறியாதார் போலிருந்துவந்த இந்த இளவலின் இதயம், எத்துணை நற்பண்புக்கு இருப்பிடம் கண்டீர் என்பர், மலர் கொய்திடும் மதிமுகவதிகளின் இதழ் கொய்துகிடந்த இந்த இளவரசன், மக்கள்பால் இத்துணை அன்புகொண்டு, மாண்பும் பண்பும் அறிந்தோனாக இருத்தல் எங்ஙனம் இயலும் என்றல்லவா எண்ணிக்கிடந்தோம்! இதோபாரீர் அவர்தம் பெரும் செயலை! தந்தை தருமத்தை வெட்டி வீழ்த்த முனைந்தான்! மகன் அறம் காத்தான், அவனி எங்கும் அவன் புகழ் பாவப் பாடுவோம் வாரீர், என்றெல்லாம் கூறிக்குதூகலிப்பர், கொண்டாடுவர் வாழ்த்துக்களை வாரி வாரி வழங்குவர், ஒரே நாளில் நீ, மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரனாகிவிடுவாய்! மக்களின் நன்மதிப்புப்பெறுவாய்! ஆட்சிதொல்லையின்றி நடைபெறும்! எதிர்ப்பு முளைக்காது! ஏளனம் பிறவாது! ஏத்தி ஏத்தித் தொழுவர்! என் மகனே! உனக்கு, ஆட்சியின் துவக்கத்திலேயே, பெரும்புகழும், பெறற்கரிய வாழ்த்தும் கிடைத்திடவேண்டும் என்பதற்காகவே, நான் இந்தக் கொடிய உத்தரவு பிறப்பித்தேன்! நான் மக்களின் மனக்கொதிப்பைக் கிளறியது, உன்பால் பிறகு, மக்கள் அன்பு பெய்திடவேண்டித்தான்! தந்தை மகனுக்குச் செய்யும் தியாகத் திருத்தொண்டடா இது! நான் கொடியவன் ஆகிறேன், உன்னை நல்லவன் ஆக்குவதற்காக! என் ஆட்சிக்குப் பெரும்பழி தேடிக்கொள்ளுகிறேன், உன் ஆட்சிக்கு வாழ்த்துப் பிறக்கவேண்டும் என்பதற்காக" என்று கூறினனும், மன்னன்; மன்னனாக வேண்டியவன், ஆச்சரியத்தால் மூர்ச்சையானனும்.

*

மேலே சொல்லப்பட்டது கதை!!

ஆச்சாரியார், இதுபோலத் திட்டமிட்டுக் காரிய மாற்றவில்லை, என்றபோதிலும் அவர் ஆண்டகாலத்தில் செய்த அடாத காரியம், கதையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது போன்றதோர் சூழ்நிலையை உண்டாக்கிவிட்டது! அவர் மக்களின் மனதை எரிமலையாக்கிடும் ஓர் கல்வித்திட்டத்தைப் புகுத்தினார்! எதிர்ப்புகளைத் துச்சமென்றார்! ஏனென்று கேட்டோரைச் சிறையில் அடைத்தார்! கிளர்ச்சி நடைபெற்றது! பிணம் கீழே வீழ்ந்தது! பெரும் செயல்புரிந்தீர்கள், பெருமைக்குரிய அதிகாரிகளே! என்று தட்டிக்கொடுத்தார்! இப்படியும் ஒரு ஆட்சியா, என்று மக்கள் வெறுப்புடன் கேட்டனர்—வெகுண்டெழுந்தனர்—வேதியர் விலகினர், காமராஜர் அரியாசனம் ஏறினர், குலக் கல்வித்திட்டத்தை ரத்து செய்தார், வாழ்த்துகள் குவியலாயின!!

•

திராவிட இயக்கம், பொதுப்பணியில் பூந்தோட்டப் பகுதி எதுவென்று தேடிடும் போக்கிலே,

என்றுமே இருந்ததில்லை. எதிர் நீச்சலிடும் இயக்கம்! எத்தனையோ ஏளனங்கள்! எவரெவரோ ஏசுவர்! ஏதுமறியாதவர், இவர்கட்கென்ன தெரியும் என்று இறுமாந்து கேட்பர், எல்லாம் புரிந்துவிட்டதாக எண்ணிடும் மக்கள், கெக்கலிசெய்வர்! நாலும் நாலும் அறியார்கள், பாலும் வேலும் தெரியார்கள். நாலும், வாலும் காண்பார்கள், என்று கதைப்பார், கவிதை இயற்றித் தோற்றவர்; வசைபாடுவதாக எண்ணிக்கொண்டு! நண்பன் என்று நம்புவோம், அவர் பிறகு நயவஞ்சகம் புரிவார்! வேண்டியவர் என்று கொண்டாடுவோம், அவர் வேற்றாருக்கு அடைப்பம் தாங்கச் சென்று விடுவார்! ஆதரவு கிடைக்கும் இடம் என்றெண்ணி அருகே செல்லுவோம், அடுத்துக்கெடுப்போன் படமெடுப்பான்! இப்படிப் பலப் பல இடர்பாடுகளுக்கு இடையிலே இருந்து பணியாற்றும் இயக்கம். எனவேதான், யாரேனும், எந்தச் சிறு அளவேனும், நம் பக்கம் நிற்பவர் போலக் குறி காட்டினாலும், குதூகலப்படுகிறோம், இருகரம் நீட்டி வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம்! துணை தேடிடும் நிலையில் உள்ளவர்கள், வலிவற்றவர்கள் என்பதால் அல்ல. நாம் தூய்மையுடையது என்று கருதும் இலட்சியத்திலே, நமக்கு உள்ள 'பிரேமை' எங்கெங்கு, யாரார், அந்த இலட்சியத்திடம் அன்பு காட்டுகிறார்கள் என்று ஆவலோடு தேடச்செய்கிறது! எளிதிலே கிடைக்கும் இலந்தை என்றாலும், இன்பவல்லியிடம் தந்தால் அவள் மகிழ்வாளே, என்று எண்ணும் காதலன், கனியினைக் கருவூலம் என்றெண்ணி அல்லவா, இல்லம் எடுத்துச்செல்கிறான்—அதுபோல! யாராக இருப்பினும், ஒரு துளி, நமது இலட்சியத்தை ஆதரிப்பவராகத் தெரிந்தால், நாம் அவர்பால் இதயத்தைப் பறிகொடுத்து விடுகிறோம்—நல்ல பண்பு, இல்லை என்பார் இல்லை—எனினும் நமது நிலையை நாம் புரிந்துகொள்ளத்தானே வேண்டும்! ஆதரவாளராக நமக்குத் தோற்றமளிப்பவர், காட்டும் குறி, உதட்டு அசைவா அல்லது உள்ளம் சிந்துவதா, என்று ஆராயக்கூட நமக்கு முடிவதில்லை, எனவேதான், சங்கராச்சாரியார் இந்தியைக் கண்டிக்கிறார்—சர்மா மத்ய சர்க்காரைச் சாடுகிறார்—சகலகுண நாயுடு, கோயில்கள் போதும் என்று இடித்துரைக்கிறார்—டில்லியின் ஆதிக்கம் அதிகம்தான் என்று திருமலாச்சாரி கூறுகிறார்—என்றெல்லாம் பேசியும் எழுதியும் மகிழ்கிறோம்! இவர்கள் கூறுவதன் நோக்கம் என்ன, எந்த நிலைமையில்—இவைபற்றிக்கூட, எண்ணுவதில்லை.

அவள் தந்த முத்தம் மழலை மொழியும் மரகதமணிக்குத்தான், ஆனால் பார்த்திடும் காதலனுக்கு, தன் கன்னத்தில் அல்லவா, அந்த அழகி முத்தம் பதிப்பதுபோல ஓர் பிரேமை உண்டாகிறது—மயக்கம்—சந்தேகமில்லை—எனினும் அதிலே ஓர் தனியான சுவை இருக்கத்தான் செய்கிறது! என் செய்வது!!

திராவிட இயக்கம் இத்தகைய நிலையில் இருப்பதால் யாரார், தன் இலட்சியத்துக்கு ஆதரவு காட்டக் கூடியவர்கள் என்று தேடுகிறது, நாடுகிறது, அவர்களிடம் அன்பு காட்டுகிறது, அவர்களின் உயர்வுக்கும் வெற்றிக்கும் பாடுபடுவதிலே அகமகிழ்கிறது, ஆனால் அந்தோ! அவர்களில் பலர் மாணிக்கவேலர்களாகிவிடத்தான் செய்கிறார்கள், வேதனைப்படுகிறோம். வெகுண்டெழுகிறோம், எனினும் எங்கேனும் வேறோர் 'பேர்வழி' நடிக்கக் காண்கிறோம், இதோ ஓர் நண்பர்! இவர் மிக நல்லவர்!! என்று கூறிக்கொண்டு, திக்குநோக்கி நடக்கிறோம், திருப்புகழும் பாடுகிறோம். ஏமாளிகள் என்பதல்ல இதன் பொருள், இலட்சியத்திலே அவ்வளவு பாசம் கொண்டுவிட்டோம் என்பதுதான் உண்மையான பொருள். இந்தப்பாசம்தான், திராவிட இயக்கத்தை இன்று காமராஜருக்கு வாழ்த்துரைக்க வைக்கிறது! இலட்சியத்தில் எத்தனைப் பாசம் இருந்தால் இடையக்கோட்டை தி. மு. க. தோழர்கள், காமராஜரே, வருங்காலத் திராவிடத்தின் முடிசூடாமன்னரே! என்று கூறியிருப்பர்!!

வாழ்த்துகிறோம், காரணம் விளக்கம் மேலே தரப்பட்டிருக்கிறது, பலன், கீழே காண்க!!

வாழ்த்துகிறோம், வரம் கிடைக்கிறது!! என்ன வரம் என்று கேட்கிறீர்களா?

அதோ, நெல்லையில் கூண்டேறி நிற்கிறார்கள் நமது தோழர்கள், தூத்துக்குடி வழக்கு!! வழக்கு வாபஸ் உண்டா? இல்லை!!

டால்மியாபுரம் கல்லக்குடி ஆக்கப்பட்டதா? இல்லை.

துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான தோழர்களின் குடும்ப பாதுகாப்புக்கு ஏதேனும் உதவி கிடைத்ததா, சர்க்காரிடமிருந்து? இல்லை! எண்ணம் இருப்பதாகக்கூடத் தெரியக் காணோம்

கிடைக்காததை அல்லவா கூறுகிறாய்—என்று கேட்பீர்கள். சரி! கிடைத்ததையும் கேளுங்கள்.

நடிகவேள் ராதவின் இராமாயண நாடகத்துக்குத் தடை!

அன்பின் வெற்றி அல்லது ஆரிய சூழ்ச்சி, என்ற நாடகத்துக்குத் தடை! இது, சிற்றூர் பலவற்றிலே, செங்காட்டூர் நாடகக்குழுவினர் நடத்தி வந்த நாடகம். இக்குழுவினரில் சிலர் தி. மு க. நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர்கள்!

இரு நாடகங்களுக்குத் தடை!

இரு நாடகங்களும் திராவிட இயக்கக் கருத்தளிப்பவை!

ராதாவின் ராமாயணம் நடைபெற்று, ஆராய்ச்சியாளர்கள் அது அபத்தம் என்று கூறியது கேட்டோ, ரசிகர்கள் அது கசக்கிறது என்று குறைகூறியோ அல்ல, தடை!

நாடகம் நடத்துவதாக அறிவித்தார்—தடை பிறந்தது.

கண்டேன், கவனிப்பதாகச் சொன்னார், தடை நீக்கப்படலாம், என்று நடிகவேள் கூறியதாகச் செய்தி காண்கிறோம், மகிழ்கிறோம்.

அன்பின் வெற்றிக்கும் தடைதான்—ஆனால், பாபம், அந்த நடிகர்கள் காமராஜரைக்கண்டு பேசும் வாய்ப்புப் பெறவில்லை.

கிடைத்திருக்கிற வரம் இது! வாழ்த்துகிறோம், வரம் கிடைக்கிறது!!

★

திருச்சி நிருபர் தீட்டவேண்டிய கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு — வணக்கம். இத்துடன் வருகிற செய்தியை உடனே பிரசுரித்து தலையங்கம் தீட்டவும். நீங்களே தீட்டவேண்டும்—மற்றவர்கள் தீட்டுவதில் மிளகாய் குறைவு!! நமது மார்க்கட்டுக்கு மிளகாய் அதிகம் வேண்டும்.

நிருபர்
சினிமா வெறுப்பரசன்.

*

(செய்தி)

கண்ணீர்த்துளியின் திண்டாட்டம்

கேள்விப்பாணம் கண்டு ஓட்டம்

பொதுமக்கள் கொண்டாட்டம்

திருச்சியில் கண்ணீர்த்துளி கரைகிறது

சினிமாக் கட்சியைச் சீந்துவாரில்லை!

நேற்று மாலை, திருச்சி டவுன் ஹால் மைதானத்தில், கண்ணீர்த் துளிகளின் கூட்டமொன்று நடைபெற்றது. ஏதோ சத்தம் கேட்கிறதே என்றும், தொலைவில் பறந்து கொண்டிருந்த கொடி, கருப்பும் சிகப்புமாகத் தெரிந்ததால் திராவிடர் கழகக் கூட்டமென்று எண்ணியும் மக்கள் வந்தனர் — கண்ணீர்த் துளி கூட்டம் என்று தெரிந்ததும் பலர் வெளியேறிவிட்டனர். கூட்டம் நடத்திய சிறுவர்களுக்கு முகம் அசிங்கியமாகிவிட்டது. சினிமாவை விடு! சிலம்பம் எடு! போன்ற முழக்கங்கள் வானை முட்டின! கண்ணீர்த் துளிகளின் சர்வாதிகாரி பேச எழுந்தார். ஒரு அச்சடித்த கேள்வித்தாள் தரப்பட்டது. சி. என். அண்ணாத்துரைக்கு 3 கேள்விகள் என்று அச்சிடப்பட்ட நோட்டீஸ். அதைப் பார்த்ததும், கண்ணீர்த் துளி, நடுநடுங்கிப் போனார். கை நடுக்கம். இதைக் கண்ட சில கண்ணீர்த் துளிகளே பரிதாபப்பட்டு, மாலைகள் போடுவது, கைத்தறி ஆடைகள் போடுவது என்ற பெயரால், அருகே சென்று, கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று புத்தி கூறினார்கள். பேச நா வராமல் நெடு நேரம் நின்றுகொண்டே, மாலைகளை எடுத்துக் கீழே வைப்பதுபோலவும், துண்டுகளை மடித்து வைப்பது போலவும் சினிமாக்கட்சிக்காரர் நடித்தார். பிறகு அந்த 3 கேள்விகளுக்கும் ஆமாம்—ஆமாம்—என்று அழுகுரலில் பதில் அளித்தார். மக்கள் ஒரே வெறுப்படைந்தனர். இவ்வளவுதான் இதுகளோட சமாசாரம் என்று கேலி பேசினர். உடனே கலைந்து போய்விட்டால், கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டதாகக் கண்ணீர்த்துளிகள் சிந்தாப்பு பேசக்கூடும் என்பதற்காக, கொஞ்சம்பேர் (நாற்றுக்கணக்கில்) (இல்லை இல்லை, இன்னும் குறைவு, 60 இருக்கும்) கூட்டத்தில் இருந்தனர். கண்ணீர்த்துளியால் பேச்சைச் சீக்கிரம் முடிக்கமுடியவில்லை. இழுத்து இழுத்து எதை எதையோ பேசிக் கொண்டே காலத்தை ஓட்டினார். அன்றைய கூட்டம், கண்ணீர்த்துளிகளுக்கு ஒரு வீழ்ச்சி என்று பேசிக் கொள்ளப்படுகிறது. இனி திருச்சியில் தில்லுமல்லுகளுக்கு இடமில்லை.

*

[ஆசிரியருக்கு:—

இதைப் பிரசுரிக்கவும், தலைப்புகள் மாற்ற வேண்டுமானால் வேறு சில தலைப்புகளும்சேர்த்துக்கொள்ளவும். பிரசுரத்துக்கு இது. தாங்கள் தெரிந்து கொள்வதற்காகக் கூட்ட நிகழ்ச்சி பற்றித் தனியாக ஒரு கடிதம் எழுதி இருக்கிறேன். படித்துவிட்டு, கிழித்துவிடவும். ஐயாவுக்கும் காட்ட வேண்டாம்]

(பிரசுரத்துக்கு அல்ல...... தங்கள் சொந்தப் பார்வைக்கு)

அன்புள்ள தோழரே,

வணக்கம். தி. மு. க. கூட்டம், அன்று மிகவும் பிரம்மாண்டமானது. டவுன் ஹால் மைதானம் நிரம்பி, வழிந்தது. இத்தனைக்கும் ஞாயிற்றுக்கிழமை அல்ல—திங்கட்கிழமை. அண்ணாதுரை பேசினான். எப்போதும் அதிக நேரம் பேசாதவன் அன்று நீண்ட நேரம் பேசித்தொலைத்தான். நம்மால் வந்த வினைதான். தங்கள் யோசனைப்படி, கேள்வித்தாள் அச்சடித்துக் கொடுக்கப்பட்டது. நம்ம கழகத்தைப்பற்றி பேசாமலிருந்திருப்பான், இந்த கேள்வித் தாள் கிடைக்கவே பேச்சின் ஆரம்பமே அதுவாகப் போய்விட்டது. கேள்விகளைப் படித்துக் காட்டினான். கூட்டத்தில் உடனே ஒரு பரபரப்பு ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஏற்படவில்லை.

செல்வாக்கில்லாத கட்சிதானே கிளர்ச்சிதேடும் என்ற கேள்விக்கும், கவர்னர் சம்பளம், ஐ. நா. சபை, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவன் ஏதேதோ விளக்கம், அர்த்தம் சொன்னான்—ஜனங்கள் ஆமோதிப்பதற்காகப் பலதடவை கரகோஷம் செய்து உற்சாகப்படுத்தினார்கள். இப்படிக் கேள்விகள் கேட்பது, நம்மீது கோபம் கொண்டல்ல, எல்லாம் இரத்தபாசம், என்றான், கூட்டத்தில் ஒரே குதூகலம். எனக்கும் சட்டம் படிக்கத்தெரியும் ஏதோ ஒரு பி. ஏ. படித்தவருக்கு புரியும் அளவாவது எம். ஏ. படித்த எனக்குப் புரியும், என்றாவது ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன் என்றான். அதற்கும் கைதட்டினார்கள். உங்களோடு இருந்தபோது, கேள்விகளுக்குப் பதில் கூறும் திறமை எவ்வளவு இருந்ததோ, எப்படி இருந்ததோ அது அப்படியேதான் இருக்கிறது, நண்பர்களே! சந்தேகப்படாதீர்கள் என்று பேசி ஜனங்களைச் சிரிக்கச் செய்துவிட்டான். திராவிடர் கழகத்தில் நாங்கள் இருந்தபோது தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளுக்கு

நாங்கள் கட்டுப்பட்டவர்கள்—நாங்கள் விலகிய பிறகு ஏற்பட்ட, பார்ப்பானே வெளியேறு என்ற கொள்கை எங்களை எப்படிக் கட்டுப்படுத்தும், என்று கேட்டான், நியாயம்தானே என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். பொதுவாக, கேள்விகேட்டது நமக்குச் சாதகமாக முடியவில்லை. கூட்டம் நீண்டநேரம் நடந்தது. ஜனங்கள் கலையவில்லை. திருச்சி சுற்றுப்புற ஊர்க்காரர்கள், மாலை மரியாதை செய்தார்கள். பொதுவாக, அன்றைய கூட்டம் அவர்களுக்குப் பெரிய வெற்றி. விரைவில் நாம் ஒரு பெரிய கூட்டம் நடத்தவேண்டும். ஐயாவைக்கொண்டு நடத்துவதைவிட, நீங்கள் வந்தால்தான் சரியான சூடு கொடுக்கமுடியும். தேதி கொடுத்தால் சினிமா ஒழிப்பு நாள் கொண்டாட ஏற்பாடு செய்யலாம். சித்ராடாகீஸ் மானேஜர் (இப்போது இல்லை) சிங்காரம், கூட்டச் செலவு பூராவும் தருவதாகச் சொல்கிறார். எதற்கும், கேள்விகள் தருவது சரியான முறை அல்ல, என்று எனக்குத் தோன்றுகிறது.

இப்படிக்கு
சினிமா வெறுப்பரசன்.

❀

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் M.A

7

அடிக்கடி வியாபார மந்தமும் செழிப்பும் மாறி மாறி வருவதும் இதையொட்டி லட்சக்கணக்கானத் தொழிலாளர் கூலியிறங்கியும் வேலை யிழந்தும் கஷ்டப்படுவதும், தேவைக்குமேல் உற்பத்தி செய்வதும், செயற்கைப் பஞ்சம் உண்டாக்குவதும், இவைகளின் காரணமாக ஒரு சிலர் எப்பொழுதுமே உல்லாச வாழ்வு வாழ்வதும் பெரும்பாலானவர் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் ஆலாய்ப்பறப்பதும், ஆலைகள் மூடப்பட்டு இயந்திரங்கள் ஓய்ந்து கிடக்க, வெளியே ஆயிரக்கணக்கான தொழிலாளருக்கு வேலை இல்லை என்ற விபரீதமும், நிலத்துக்குச் சொந்தக்காரர் ஒருவர்; அதில் உழுது பயிரிட்டு விவசாயம் செய்பவன் வேறொருவன், அறுவடை செய்பவன் ஒருவன், அறுவடைக்குப் பிறகு அளந்து பார்த்து அகமகிழ்பவன் வேறொருவன் என்ற முறையிலே நாட்டு நடப்பு இருக்கும்.

இந்தப் பொருளாதார முறையால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் காட்டி, போட்டி என்றோ சுதந்தரம் என்றோ இருந்தால் ஒரு சிலர் பாமரர்களை சுரண்டுவதைத் தடுக்கமுடியாது என்று முடிவுகட்டி இதற்கெதிராக திட்டப் பொருளாதார முறை என்ற அமைப்பை பொதுவுடைமை வாதிகள் ஏற்படுத்த விரும்புகின்றனர். ரஷ்யாவில் ஏற்படுத்தியும் இருக்கின்றனர்.

பொதுஉடைமைக் கொள்கைப்படி திட்டப் பொருளாதார அமைப்பில் போட்டி கிடையாது. முதலாளிக்கு முதலாளி போட்டி, தொழிலாளிக்கும் தொழிலாளிக்கும் போட்டி, சாமான்களை வாங்கும் மக்களுக்குள் போட்டி இவையெல்லாம் இங்கு காணமுடியாது. உற்பத்தி சாதனங்கள், அத்தனையும் அரசாங்கத்துக்குச் சொந்தம். ஒரு மனிதன் மற்றொருவனை வேலைக்கமர்த்துவது கிடையாது. அமர்த்த வேண்டிய அவசியமும் இல்லை.

ருஷ்யாவில் அரசாங்கமே ஒரு பெரிய முதலாளி. என்ன உற்பத்தி செய்வது, எவ்வளவு செய்வது, யாரை, எத்தனைபேரை வேலைக்கமர்த்துவது, உணவு உற்பத்தியை முதலில் பெருக்குவதா, உல்லாசப் பொழுதுபோக்குக்குத் தேவையான சாமான்களை கவனிப்பதா—எல்லாவற்றிற்கும் அரசாங்கமே பொறுப்பாளி.

அதனால், சுரண்டுவதற்கு முதலாளி இல்லை. பலர் கஷ்டப்பட ஆதாயம்பெறும் சிறு கூட்டத்திற்கு இடமில்லை. முதலாளி, தொழிலாளி, எஜமான் வேலைக்காரன்—இந்தத் தகராறே கிடையாது.

வாங்குபவர் போட்டியினால் விலை ஏறுவதும், விற்பவரிடையே போட்டியினால் விலை இறங்குவதும் இல்லை. அரசாங்கம் விலையை நிர்ணயம் செய்து, பங்கீடு முறையால், விலையைக் கட்டுப்படுத்துகிறது.

உண்மையிலேயே இப்படி ஒரு நாட்டில் பொருளாதார நிலைமை ஏற்பட்டால் அது மிகவும் போற்றக் கூடியதாயிருக்கும்.

ஆனால், இந்தப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்திவிட்டால் மட்டும் போதுமா? அது வெற்றி பெற நடக்கவேண்டுமானால் அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். ரஷ்யாவை எடுத்துக்கொண்டால், அந்நாட்டில் எல்லாத் துறைகளிலும் என்னென்ன, அவை எவ்வளவு உற்

பத்தி செய்யவேண்டுமென்று திட்டம் தீட்ட Gosplan என்ற ஒரு ஸ்தாபனம் உண்டு. இந்த முழுத் திட்டத்தை, நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரதேசம், ஒவ்வொரு தொழில் துறை, ஒவ்வொரு தனி ஆலையென்று கணக்கிட்டு எவ்வளவு உற்பத்தி செய்வதென்று திட்டமிடுவார்கள். அவர்களால் குறிப்பிட்ட அளவு உற்பத்திசெய்து முடிக்கவேண்டியது ஆலை நிர்வாகிகளின் பொறுப்பு.

ரஷ்யாவில் தனிஉடைமை கிடையாதாகையால், ஒரு தொழிலாளிக்கு சொந்த சொத்து கிடையாது. ஆலையில் வேலை செய்பவனாயிருந்தால், அரசாங்கம் நிர்ணயிக்கும் கூலியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். எட்டளவில்தான் நாட்டின் சொத்துக்கள், ஆலைகள், உற்பத்தி சாதனங்கள் பொதுஉடைமையாக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அவை எல்லாம் அரசாங்கத்துக்குத்தான் சொந்தம். தொழிலாளிக்கு ஆலை நிர்வாகத்தில்கூட பங்கு கிடையாது.

ரஷ்யாவில் தொழிற்சங்கங்கள் உண்டு. ஆனால், முதலாளித்துவ நாடுகளில் தொழிற்சங்கங்கள் பலம் பொருந்தியவைகளாக மாறி முதலாளிகளை மிரட்டமுடிகிறதே, அது ரஷ்யாவில் நடக்காது. அரசாங்கமே முதலாளியாதலால், வேலை நிறுத்தம், ஆலையில் தகராறு செய்தல், குறைகளை வெளிப்படுத்துதல், ஆலை நிர்வாகியாகிய அரசாங்க உத்தியோகஸ்தனை எதிர்த்துப் பேசுதல், இவைகளெல்லாம் அரசாங்கத்தை எதிர்த்ததாக, ராஜதுரோகமாக எடுத்துக்கொள்ளப்பட்டு கடுமையான தண்டனை விதிக்கப்படும். ஆகலால், ரஷ்யாவிலுள்ள தொழிற்சங்கங்கள் தொழிலாளிக்கு அரசாங்கத்தின் மேலிருக்க வேண்டிய பக்தியை வளர்ப்பதற்கே பாடுபடும்.

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளருக்கும் முதலாளிக்கும் தகராறு ஏற்பட்டால், அரசாங்கம் நடுநிலைமை வகித்து, இருவருக்குள் சுமுகமான நிலைமை ஏற்படுத்தமுடியும். ஆனால் ரஷ்யாவிலிருப்பது போல் அரசாங்கமே முதலாளியென்றால், தொழிலாளருக்கு, எதிர்த்துப்பேசவோ குறைகூறவோ அல்லது தகராறைத் தீர்ப்பதற்கு வழி தேடவோ இடம் கிடையாது. தொழிற்சாலையில் நிர்வாகம் பார்க்கும் உத்தியோகஸ்தனுக்குக் கோபமூட்டினாலோ அவனுடைய விரோதத்தைச் சம்பாதித்தாலோ தொழிலாளியின்பாடு பெரும்பாடாக முடியும். அரசாங்கத்துக்குத் துரோகச்செயல் செய்ததாக தண்டிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரஷ்யாவில் ஒரு அபிவிருத்திக் குறிப்புச் சீட்டு கொடுக்கப்படும். அதில் அவன் வேலை பார்த்த இடங்கள், வேலை பார்த்த காலம், முந்திய வேலையை விடுவதற்குக் காரணம் இவைகள் குறிப்பிட்டிருக்கும். உள்நாட்டிலேயே அவன் பிரயாண அனுமதிச் சீட்டு பெற்றால்தான் ஓரிடத்திலிருந்து வேறிடத்துக்குச் செல்லலாம். ரஷ்யாவிலிருந்து வெளியேறமுடியாது உள்நாட்டிலேயே போகவா முடியாது.

பொது உடைமையில் தனிச் சொத்துரிமை கிடையாது. முதலாளித்துவத்தில் தனிச் சொத்துரிமை இருப்பதால் ஒரு சிலர் சொத்து சேர்க்கும் ஆசையால் மற்றவர்களை சுரண்டுவது முடிகிறதென்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி சுரண்டல் ஒரு சிலரின் பேராசையின் விளைவே தவிர சொத்துரிமையால் ஏற்படுவதல்ல. சுரண்டுவதைத் தடுப்பது, சுரண்டுபவரைத் தண்டிப்பது நியாயமே தவிர சொத்துரிமையைத் தர மறுப்பது சரியல்ல.

ஆக சொத்துரிமை மறுக்கப்பட்டு தனக்கென்று பொருள் தேடுவதைத் தடுத்து விடுவதால் சொந்த நலத்திற்காகப் பாடுபடுவதை நிறுத்திவிட்டால், வேலை நன்றாக செய்தாலும் அரைகுறையாக செய்தாலும் எல்லோருக்கும் ஒரேசீத ஊதியம் என்று ஏற்படுத்திவிட்டால் சோம்பேறிகள் வேலைசெய்யாமலே சம்பளம் பெறுவதைத் தடுப்பது எப்படி? சாமர்த்தியக்காரர்கள் அதிக ஊக்கத்துடன் வேலைசெய்யத் தூண்டுவதற்கு என்ன இருக்கிறது?

இயற்கையாகவே ஒருவனுக்கு சொத்து முன்னேற்றத்தைக் கருதி ஏற்படும் உற்சாகத்தினால் தொழில் உற்பத்தி அதிகரிக்குமே தவிர அரசாங்கமாகப் பார்த்து ஒருவன் இவ்வளவு செய்து முடிக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அவன் சோம்பித் திரியாதபடி தடுக்க, நிர்ணயிக்கப்பட்ட அளவு வேலை அவன் செய்து முடிக்கவேண்டும் இல்லாவிட்டால் தண்டனை என்று பயமுறுத்துவதனால் ஓரளவு உற்பத்தி வளர்ந்தாலும் இம்முறைக்கும் கட்டாயவேலைக்கும் அதாவது அடிமை வேலைக்கும் அதிக வித்யாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

பொதுவுடைமையில் சமத்துவம் ஏற்படுகிறதா என்றால், ஒருவருக்கும் தனக்கென்று சொத்து ஒன்றும் இல்லாததால், ஒருவகைச் சமத்துவம் இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் அடிமைகள் போல, அரசாங்கமே எஜமானன் போல, எதிர்த்துப்பேசவும் தைரியமின்றி, சட்டத்தால் தடைசெய்யப்பட்டு, எல்லோரும் சமமாக்கப்படுகிறார்கள்.

ஆகவே என்ன நன்மை பயப்பதாக இருந்தாலும் தனிச் சொத்துரிமையை மறுத்து எல்லோரையும் அடிமையாக்கி, அரசாங்கத்துக்காக, அரசாங்கத்தை நடத்தும் ஒரு தனிப்பட்ட பொது உடைமைக் கட்சிக்காக, அந்தக் கட்சிக்காரர்களுடைய நல்வாழ்வுக்காக மட்டும் மற்றெல்லா மக்களும் இருப்பதாக நினைத்து அதற்குத்தக்க அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பொருளாதார முறை ஜனநாயகத்துக்கு ஏற்றதல்ல.

அரசாங்கத்துக்கு எதிராக, அதாவது எல்லோருக்கும் வேலை கொடுக்கும் ஸ்தாபனத்துக்கு எதிராகப் பேசுவதே ராஜ துரோகம், என்று எண்ணப்படும் ஒரு பொருளாதார அமைப்பைக்கொண்ட ஆட்சியில் அரசாங்கத்தை நடத்தும் ஒரு கட்சிக்கு எதிராக அரசியல் கருத்துகள் எப்படி இருக்கமுடியும்? அதனால்தான் ரஷ்யப் பொது உடைமை அமைப்பில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர மாற்றுக்கட்சிக்கே இடமில்லை. சர்வாதிகாரமாக அக்கட்சி நடந்

போதிலும், அது ஆட்சிபீடம் ஏறியதிலிருந்து ஆட்டங் கண்டதே கிடையாது. எங்கே யாராவது ஆளும் கட்சிக்கு எதிராக சதி செய்கிறார்களோ பிரச்சாரம் செய்கிறார்களோ என்று வேவு பார்க்க எங்கு பார்த்தாலும் வேவுகாரர்களை நியமித்து, சகோதரன், சகோதரன் மேலும், மகன் தந்தைமீதும், மாணவர் ஆசிரியர்மீதும் மனைவி கணவன்மீதும், கணவன் மனைவி மீதும் இவ்வாறு ஏவிவிடப்பட்டு, ஒருவர் ஒருவரை சந்தேகித்து வாழும் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, ரஷ்யாவில்.

ஆகவே, பொருளாதாரச் சுதந்தரம் போய்விட்டால் அது அரசியலிலும் அடிமைத்தனத்துக்கே வழிகோலும்.

அதனால்தான் போட்டிப் பொருளாதாரமுறை முதலாளித்துவத்தின் பிறப்பிடமாயிருந்தாலும் அதில் மக்கள் மக்களாக வாழ இடமுண்டு. அதில் மக்களாயிருக்கும் ஒரு சிலர் பேராசையால் மிருகமாக நடப்பதனால்தான் சுரண்டல் சாத்தியப்படுகிறது.

ஆகவே, போட்டிப் பொருளாதாரமுறை அல்லது முதலாளித்துவம் தன்னிலேயே கெடுதலானதல்ல. அந்த முறையை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஒரு சிலர் மற்றவரை ஏய்த்துப் பிழைக்க வழி செய்துகொள்ளுகின்றனர். இதைச் சட்டங்களின்மூலம் தடுத்துவிட்டால் முதலாளித்துவத்தில் உள்ள கெடுதல்கள் நீங்கிப்போகும்.

ஆகவே மனிதனின் சுதந்தரத்தை அடிப்படையாகக்கொண்ட போட்டிப் பொருளாதாரமுறையை எப்படிச் சீர்படுத்தி அதன் கொடுமைகளைக் களைந்து எல்லோரும் இன்புறச் செய்வது?

நாட்டில் முக்கியமான, பொது நலத்தைப் பாதிக்கக்கூடிய, தபால் தந்தி, ரயில் போக்குவரத்து, பாங்குகள் முதலிய தொழில்கள் சர்க்காராலேயே நடத்தப்படவேண்டும். மற்ற சிறு தொழில்களை தனிப்பட்டவர்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்—ஆனால் சர்க்காரின் கட்டுத் திட்டங்களுக்குட்பட்டு. அநியாயமான கூலி கொடுப்பதை சர்க்கார் அனுமதிக்கக்கூடாது. லாபத்திலே ஒரு பகுதியை தொழிலாளரின் வாழ்க்கையை வளம்பெறச்செய்ய நல்ல குடியிருப்பு வீடு, பள்ளிக்கூடவசதிகள் இவைகளைச் செய்துதர உபயோகப்படுத்த முதலாளிகள் சட்டங்களின்மூலம் கட்டாயப்படுத்தப்படவேண்டும்.

தொழிலாளி சுதந்தரமாக வாழ அனுமதிக்க வேண்டும் அவனுடைய உரிமைகளையும் சலுகைகளையும் அரசாங்கச் சட்டத்தின்மூலமன்றி மற்ற வழிகளிலே யாரும் பறிக்கவோ, அல்லது குறைக்கவோ விடக்கூடாது. தொழிலாளருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நோய்வாய்ப்பட்டபோதும், வேலையின்மையால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்தும், வயது முதிர்ந்து சக்தியற்ற நிலைமையிலும், தகுந்த பாதுகாப்பளிக்கவேண்டும். தொழிலாளருடைய பிள்ளைகள் படிப்பதற்கும் அவர்கள் பணக்காரர்களுடைய பிள்ளைகளோடு சம சந்தர்ப்பத்தோடு உத்தியோகங்களுக்குப் போட்டியிட்டு வெற்றிபெறுவதற்கும் அவர்களுக்கு வழி செய்ய வேண்டும்.

மொத்தத்தில், மக்கள் நல ஆட்சி ஏற்படுத்தி, முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்தி, தொழிலாளரைப் பாதுகாத்து, நேரடியான வரிகளின் மூலம் சொத்துக்கள் ஒரு சிலரிடையே குவிந்து கிடப்பதைத் திருத்தி, மக்களுக்குள்ளே பொருளாதார நிலைமையிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைவதற்கு வழி செய்து, தொழிற்சாலையிலே இயந்திரத்திலே ஒரு பாகமாக தொழிலாளி வேலை செய்வதற்குமட்டும் என்றிராதபடி, அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்திலே அவனுக்கு ஒரு பங்கும், அதன் லாபத்திலே ஒரு பங்கும் கொடுத்து தொழிலாளரின் வாழ்க்கை, வளம் பெறச்செய்யவேண்டும் அரசாங்கம்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் ஏற்பட்டதேயன்றி அவைகளை அழிக்கவல்ல. இன்று உலகிலே காணப்படும் போட்டிப் பொருளாதார அமைப்பு சிறந்ததென்று சொல்லமுடியாது. ஆனால் அதைவிட்டு அதற்கெதிராக திட்டப் பொருளாதாரம் அல்லது பொதுஉடைமை அமைப்பை ஏற்றுக்கொண்டால் மனிதன் தன் உரிமைகளை இழந்து அடிமையாக வாழவேண்டிவரும்.

ஆகவே, இருக்கும் அமைப்பை வைத்துக்கொண்டே, ஆனால் அதில் காணப்படும் தீமைகளை ஒழிக்க அரசாங்கம் தலையிட்டு, ஏழை எளியவர்களின் நலன்களைப் பாதுகாத்து சட்டமியற்றினால், அதைவிடச் சிறந்த அமைப்பு வேறொன்று ஏற்படமுடியாது.

மக்களால், மக்களுக்காக, மக்கள் நலமே குறிக்கோளாக, எதிர்பாராததும் எதிர்பார்க்கக்கூடியதுமான எல்லா விபத்துகள் கொடுமைகளினின்றும் அவர்கள் ஒவ்வொருவரையும் பாதுகாக்கக்கூடிய அமைப்பை மக்கள் நல ஆட்சி ஒன்றால்தான் ஏற்படுத்தமுடியும்.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம். எனக்கும் சேலம் செவ்வாய்பேட்டை திரு. என். கிருஷ்ணசாமி அவர்கள் மகள் செல்வி சம்பூரணத்துக்கும் 16-9-54 வியாழன் காலை 9-மணி அளவில், கோவை வைசியாள் வீதி பேச்சி முத்து ரங்கசாமி கவுண்டர் அறநிலையத்தில் தோழர் ஈ. வே. கி. சம்பத் தலைமையில் நடைபெறும் திருமண விழாவிற்கு இயக்கத் தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கருதி வரும்படி வேண்டுகிறேன்.

அன்பன்
எஸ். ஏ. ராசமாணிக்கம்
கோவை.

திராவிடநாடு

காஞ்சி] 12—9—54 [ஞாயிறு

சென்று திரும்பிய பிறகாவது......!

★

இந்த உபகண்டத்தின் வடபகுதியில் அவ்வப்போது வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டு, பெருத்த அளவில் பொருள்களையும் உயிர்களையும் கொள்ளைகொண்டு விடுகிறது.

உயிர் அழிவையும் பொருள் இழப்பையும் உண்டாக்கும் இக்கொடுமை, இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுகிறதென்றபோதிலும், மனித முயற்சியால் அத்தகைய கொடுமைகள் நிகழாதவாறு தடுத்துவிடமுடியும் என்ற நம்பிக்கை, இக்காலத்திலுள்ள பலருக்கு ஏற்பட்டிருப்பதுபோலவே நமது நேரு பண்டிதருக்கும் ஏற்பட்டிருப்பதைக் காண மகிழ்கிறோம்.

வடக்கே பாட்னாவை அடுத்துள்ள கோசி நதி வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட சேத விபரங்களை நேரில் கண்டறியச் சென்ற நேரு பண்டிதருக்கு 'மனித சக்தி'யில் அடங்கியிருக்கும் பல உண்மைகளை, அங்குள்ள காட்சிகள் தெளிவாக்கியிருக்கின்றன.

பாட்னாவில், வெள்ளத்தின் வெறியாட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த டில்லி முதல்வர், உடனே புறப்பட்டுச் சீனாவுக்குச் சென்று அங்குள்ள காட்சிகள் சிலவற்றைப் பார்த்துவிட்டு யாருக்கும் தெரியாமல் திரும்பி பிரமபுத்ரா நதிக்கரையோரமாக வந்து சேர்ந்ததும் ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறார்.

"சீனா, பன்னிரண்டு இலட்சம் மக்களைப் பயன்படுத்தி, எண்பது நாட்களில் நூறு கல் நீளமுள்ள கால்வாயை வெட்டமுடிந்ததென்றால், நாமும் கோசி நதித் திட்ட சம்பந்தமாக ஏன் இங்கு நமது மனிதசக்தியைப் பயன்படுத்திப் பார்க்கக்கூடாதென்பது தெரியவில்லை"

என்று ஒரு போடு போட்டிருக்கிறார். உண்மைதான், மனிதவலிமையின் அளவை அளந்து அறிய வேண்டுமென்ற ஆர்வம், நேரு பண்டிதர் போன்றோருக்கு ஏற்பட்டிருப்பதைக் காணக் களிப்படைகிறோம். மனித உழைப்பின் மாண்பினை உணர்ந்தால் மாநிலத்தில் ஆகாத காரியம் எதுவும் இல்லை என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட எவரும் பண்டிதரின் இந்த யோசனையை வரவேற்காமல் இருக்கமாட்டார்கள். ஆனால், பண்டிதரின் இந்த யோசனை, அவருடைய செயல்முறைக்கு ஒத்துவரக் கூடியதுதானா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு, சீனாவை இந்தியா எட்டிக்கூடப் பார்க்கமுடியாதே என்ற சந்தேகம் உண்டாகத்தான் செய்யும். என்றபோதிலும், நேரு பண்டிதர் விரைவில் (மானசீகமாகவல்ல) நேரில் சென்று சீனாவிலுள்ள அரசியல் சமுதாய திட்டங்கள் எல்லாம் எப்படி நிறைவேற்றப்பட்டன — படுகின்றன என்பதைப் பார்க்க விரும்புவதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. போகட்டும்—பார்க்கட்டும்—மாசேதுங்கைக் காணட்டும் — சூ-இன்-லாயிடம் நலம் உசாவட்டும்—ஒரு நல்ல செயலை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகச் செய்யப்படும் எந்தக் காரியத்தையும் நாம் வரவேற்கிறோம்.

சீனத்து மக்கள், தங்கள் நாட்டுக்காகச் செய்யப்படும் எந்தச் செயலும் திரும்பவும் தங்களுக்கே பயன்படுகிறதென்ற அசைக்கமுடியாத நம்பிக்கையைப் பெற்றுள்ளவர்கள். அப்படிப்பட்டவர்கள் 80 நாட்களில் 100 மைல் நீளமுள்ள கால்வாயை வெட்டியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆனால், நேரு பண்டிதரின் ஆட்சியிலுள்ள மக்களுக்குச் சீனமக்களுக்குள்ள நம்பிக்கை இருக்கிறதா என்று கவனித்தால் இல்லையென்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. இந்நாட்டு மக்களின் உழைப்பின் பலன் முழுவதும் தனிப்பட்ட முதலாளிகளுக்குத்தான் போய்ச் சேருகிறதேயொழிய உழைப்பாளிக்கு அந்த உழைப்பின் பலன் கிடைப்பதில்லை என்பது கண்கூடாகக் காணும் ஒரு காட்சியாகும். இந்த நிலைமையில் பண்டிதர் சீனாவின் முறையை இங்கும் கையாண்டால் என்ன என்று கேட்கிறார், கேள்வி என்னவோ செவிச் சுவையாகத்தான் இருக்கிறது. ஆனால் செயல்முறையில், அதனை, அவரால் செய்துகாட்டமுடியுமா?

கும்பமேளாவைக் காணும்போது, "அது இந்நாட்டின் புராதன பழக்க வழக்கங்களில் ஒன்று, எனவே, இதனைக் காப்பது நமது கடமை" என்று பேசுவதும், சீனத்து மக்களின் செயல்திறனைக் காணும்போது அதனை வரவேற்பதும் போன்ற நிலைமாறும் சந்தர்ப்பங்கள் நேருபண்டிதருக்கு அவ்வப்போது ஏற்படுவது சகஜம் என்றபோதிலும், சீனா சென்று திரும்பிய பிறகாவது — அங்குள்ள முறைகளை நேரில் பார்த்துத் தெளிவடைந்த பின்னராவது, மக்களின் உழைப்பு மக்களுக்கே பயன்படக்கூடிய முறையில் தம்முடைய அரசியல் அமைப்பைத் திருத்திக்கொள்ளமாட்டாரா என்ற நம்பிக்கையோடு இதனை எழுதுகிறோம். சீனா சென்று திரும்பும் நேருபண்டிதருக்கு மக்கள் மன்றத்தின் நல்வரவேற்புக் கிடைக்கும் முறையில் அவருடைய செயல் முறைகள் திகழும் என்று எதிர்பார்க்கிறோம்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மானேஜர்.

ஊரார் உரையாடல்

ஒற்றன்

இடப்:—மாளிகைத் தோட்டம்

இருப்போர்:—தோட்டக்காரன்
வீட்டுக்காரி

தோட்டக்காரன்:—இதுகளுக்கு வேறே வேலே கிடையாதாம்மா! கால் ரூபா கொடுத்தாகணும்னு என் மென்னியைப்பிடிக்குதுங்க, கூட்டம் போடணுமாம். இதுக ளோட கதைதான் சிரிப்பாச் சிரிச்சுப்போச்சே—இன்னும் ஏன் கூட்டம்? நம்ம ஐயாவே இதுக ளோட மானத்தை......

வீட்டுக்காரி,—ஏலே! யாரைப்பத் திடா பேசிகிட்டே இருக்கறே இவ்வளவு கேலியா......

தோ:—எல்லாம் இந்த காங்கிரசுக் காருங்க விஷயம்தான்......

வீ:—ச்சி! அப்படி எல்லாம் காங் கிரஸ்காரரைப்பத்திப் பேசாதே!

தோ:—பேசினு என்னவாம். நம்ம ஐயா பேசற பேச்சிலே, இது நூத்திலே ஒண்ணுகூட இருக் காது......

வீ:—முட்டாள்டா நீ, இனி காங் கிரஸ்காரஸப்பத்தி குத்தலா, கேவலமா பேசக்கூடாது. இந்த இரண்டு வருஷமா இங்கே அது போலப் பேசினதைக் கேட்டுக் கேட்டுப் பழக்கமாயிடுத்து......

தோ:—ஆமாம்மா...ஐயாவும் அவ ரோட வந்து பேசற ஆசாமிங் களும், சொன்னதை எல்லாம் கேட்ட பிறகுதான், எனக்கு இந்தக் காங்கிரசோட விஷயம் புரிஞ்சுது. எல்லாம் ஒரே வட நாட்டுக்காரனுங்க கொள்ளையா மில்லே!

வீ:—சரிதாண்டா, மேதாவிதான்—இனிமேலே, வாயை மூடிகிட்டு இரு......விவரம் தெரியாமப் படிக்கு, உளறிக் கொட்டாதே. ஐயா, காங்கிரசிலே சேர்ந்தாச்சி!

தோ:—என்ன, என்னு! காங்கிர சிலே சேர்ந்துகிட்டாரா! யார்? நம்ம ஐயாவா.......எம்மா...... என்னம்மா சொல்றிங்க.

வீ:—நெஜமாத்தாண்டா, காங்கிர சிலே சேர்ந்தாச்சி, இனி காங்கி ரசைத் திட்டினு ஐயாவுக்குக் கெட்ட கோபம் வரும். இனி இங்கே அடிக்கடி காங்கிரஸ்காரர் வருவாங்க, அவங்க காதிலே விழுந்து தொலைக்கப்போவுது உன் பேச்சு, ஐயா உன்னைத் தொலைச்சே போடுவாரு......

தோ:—எனக்குப் பேசவே வாய் வரலியேம்மா....... என்னென்ன சொல்லிக் கண்டிச்சாரு...போன எலக்ஷனிலே, காங்கிரசை ஓட ஓட அடிச்சித் தோற்கச் செய் தாரு........எல்லாம் பர்மிட்கார னுங்க, பிளாக்மார்க்கட் பேர் வழிங்க, டில்லிக்குக் காவடி தூக் கற பேர்வழிங்கன்னு, பேசிப் பேசி எலக்ஷனிலே ஜெயித்தார்.

வீ:—எல்லாம் இப்பவும் எலக்ஷன் விஷயந்தான். ஐயா இப்ப காங் கிரசிலே சேர்ந்தது, ஜில்லா போர்டு எலக்ஷனுக்கு, தெரிஞ் சுதா—காங்கிரசுதான் ஐயாவை நிறுத்திவைக்குது.

தோ:—இது அதைவிட வேடிக் கையா இருக்கம்மா! சட்டசபை எலக்ஷனிலே காங்கிரசைத் தோற்கடிக்கிறது, ஜில்லாபோர்டு எலக்ஷனுக்கு காங்கிரஸ்காரராக நின்று ஜெயிக்கணும் என்கிறது. ஒரு வரைமுறையா, முன் பின் கவனமா, ஒரு ஒழுங்கா, எந்த எழவையும் காணோமே. ஐயா வுக்குத்தான் எப்படி மனசு துணிஞ்சுது, காங்கிரஸ் கட்சிக் குத்தான் எப்படி ரோஷம் மானம் இல் லாமப் போச்சி. சத் திரத்திலே, இடம் கிடையாது போடா ன்னு, விரட்டி அடிச்சி விட்டு, பிறகு அதே பண்டாரத்தைக் கூட் டிகிட்டு வந்து பெண் ணைக் கலியாணம் செய்துகொடுக்கிற வெட்கங் கெட்ட கதைபோல இருக்குது ......செச்சேசே...

வீட்டு:—உன் பிழைப்பிலே மண் விழப்போவுது...புத்தியா நடந் துக்கோ......

தோ:—எனக்கு எப்படிம்மா அந்தப் புத்திவரும்—நான் ஏழை—ஒரு கொள்கை கோட்பாடுன்னு, அதுக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தான் தெரியும். ஐயாபோல, வேஷம் மாத்தற வித்தை எனக் கென்ன தெரியும்.

வீ:—வாயாடிடா நீ......

தோ:—ஆமாம்மா, இனி நீங்கவேறே எப்படிப் பேசுவீங்க. முன்னே எல்லாம் ஐயாவே சொல்வாரு, நம்ம தோட்டக்காரன் கேக்கிற கேள்விக்குப்பதில் சொல்ல முடி யாது, படேபடே காங்கிரஸ் காரனுங்களாலேன்னு, இனி எனக்கும் பிழைப்பு நடக்க வேணும்னு, நானும் வந்தேமாதர மாகணும், எம்மா, அப்படித் தானே......நல்ல நியாயம்மா... பெரிய இடம்......எனக்கென்ன, நான் வாயைப் பொத்திகிட்டு கிடக்கிறேன். ஆனா இந்தப் பாழாப்போன காது இருக்குது—ஐயாவோட போக்குபத்தி யாராரு என்னன்ன பேசப் போறானுங்களோ, தெரியலே, கேட்டு ஆகணுமே......

2.

இடப்:—கோர்ட் காம்பவுண்டு

இருப்போர்:—மிராசுதார்
வக்கீல்.

வ:—கங்கிராஜுலேஷன்ஸ்! பேஷான காரியம் செய்தீர். சரி யான சமயத்திலே சமர்த்தான யோசனை,.....

மி:—எதைச் சொல்றிங்க......

வ:—காங்கிரசிலே சேர்ந்தாச்சாமே ......ஜில்லாபோர்டுக்கு......

மி:—ஆமாம்......மத்தவா ஆச்சரியப்படலாம், உமக்கு இராதே...... என்னைத்தான் உமக்கு நன்றாகத் தெரியுமே......

வ:—தெரியாமலென்ன... ஆனா, நீங்க இந்த இரண்டு வருஷமாக் காங்கிரசை எதிர்த்துண்டு, இந்தத் திராவிட கட்சிகளோட சகவாசம் வைச்சுண்டு இருந்தது, நேக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கல்லே. உண்மையைச் சொல்றதிலே தப்பென்ன, பார் கிளப்பிலே, நான் உம்மைத் தூஷிச்சிக்கூடப் பேசி இருக்கேன். இவனுக்கு என்னடா போங்காலம்—காங்கிரசை வைய்யறானே, இவன் உருப்படுவானான்னு கூடப் பேசியிருக்கேன்......

மி:—நீங்க ஒரு பைத்யம். நான் இந்த இரண்டு வருஷமா காங்கிரசிலே இல்லையே தவிர, எனக்குக் காங்கிரஸ் பக்தி போயிட்டுதான்னா அர்த்தம். சதா எனக்குச் சங்கடம்தான். என்னடா நமக்கு இப்படி ஒரு காலம் வந்ததே, காங்கிரசை எதிர்க்கவேண்டி இருக்கேன்னு வேதனைதான். ஆனா இந்தக் காங்கிரஸ் தலைவர்கள் இருக்காளேன்னா, தலைவாள், அவாளுக்குக் கொஞ்சம் நம்ம சக்தி, செல்வாக்கு, இதைக் காட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டுப்போச்சி தலைகால் தெரியாமல் ஆடினா, இந்தத் தலைவாள். கொஞ்சம் மட்டம் தட்டி வைச்சி புத்தி கற்பிக்கவேண்டி இருந்தது, செய்தாச்சி. இப்ப நான் காங்கிரஸ் காண்டிடேட்டாத்தான் ஜில்லாபோர்டுக்கு நிற்கறேன்.

வ:—ரொம்ப சந்தோஷம். கேள்விப்பட்டதும், ஆத்துக்கே வரணும்னு இருந்தேன். உம்மோட கூட்டாளிகள், திராவிடாளனா வது இருந்தா தொலைக்கப்போறானேன்னுதான் வரலே......

மி:—இனி, அந்தப் பயல்களை அண்டவிடுவேனா......அந்தக் கேஸ், எப்படி இருக்கு.

வ:—அதைப்பத்தி உமக்கென்ன கவலை. கேஸ் ஜெயிச்சாச்சின்னு உறுதி தர்ரேன். போதுமோ! போய் எலக்ஷன் வேலையைக் கவனியும்—நானிருக்கேன்.

3

இடம்:—சந்தைப்பேட்டை

இருப்போர்:—மிராசுதார்
கழகம் கந்தசாமி.

மி:—வாய்யா, கழகம்! எங்கே இரண்டு மூணு நாளா வீட்டுப் பக்கமே காணோம்......

கந்:—எனக்கு என்னங்க வேலை அங்கே......

மி:—ஏன்.........என்ன ஒருமாதிரிப் பேசறே......

கந்:—ஏனய்யா, வீணா வேதனையைக் கிளப்பறே........நாங்களெல்லாம் ஏமாளிகள்...நீர் காரியஸ்தர்...

மி:—எனக்குத் தெரியும் உனக்குக் கோபம் தலைக்குமேலே வரும்னு ....

கந்:—என்ன செய்யறது, எங்களுக்கு மானரோஷத்திலே கொஞ்சம் அக்கரை இருக்குதே. காத்திலே பறக்கவிட முடியுமா, நினைச்சா கட்சியைவிட்டுக் கட்சி மாறத் தோணுமா........கொள்கைன்னு ஒண்ணு இருக்கே......

மி:—உனக்குமட்டுந்தானா ....எம்பா கந்தசாமி! எனக்கு அந்தக் கொள்கை இல்லையா! அடே, இப்படிப் பாரப்பா! காங்கிரசிலே சேர்ந்துவிட்டதாலே, கொள்கை போயிடுமா.........இந்த மனசைவிட்டு கொள்கை எப்பவும் போகாது, எப்பவும் போகாது கந்தசாமி, போகாது..........ஒரு விஷயத்துக்காகக் காங்கிரசிலே சேர்ந்திருக்கறேன். உள்ளதைச் சொல்ல வேணும்னா, நான் காங்கிரசிலே சேரலே, காங்கிரஸ் என்னோடு சேர்ந்திருக்கு...எலக்ஷனுக்கு, இப்ப, என் தயவு தேவைன்னு வந்து அந்தக் காங்கிரசு மண்டியிட்டுது. முன்னே, என்னை எதிர்த்துக்கிட்டே, ஓட ஓட விரட்டி அடிச்சேன், இப்ப, வா, உனக்கு நானே அபயம் கொடுத்து, இதே இடத்திலே ஜெயிக்கவைக்கறேன்னு சொல்லி அந்தக் காங்கிரசைக் கூட்டிகிட்டு வந்திருக்கறேன். புரியுதா சூக்ஷமம். கண்டபடி ஏசினானுங்களே, அந்தத் தலைவனெல்லாம், இப்ப என் கிட்டவந்து தாளம் போடணுமே. சர்வபங்கம், கந்தசாமி! இதுதான் காங்கிரஸ் சர்வபங்கம் தெரியுதா!

கந்:—ரொம்ப நல்லாப் புரியுது உங்களோட ஏமாத்துப் பிழைப்பு. போய்யா வாயை மூடிகிட்டு—புளிப்பு குத்தறயா, என்னிடமே பல்லை இளிச்சிகிட்டு ஓடறே, பட்டம் பதவிக்கு, அதற்கு லாபாயின்ட் பேசறாரு லாபாயின்ட்.........

4

இடம்:—கதர்க்கடை

இருப்போர்:—காந்திதாசன்
சிவபாரதி.

சிவ:—இந்தத் தடவை, திராவிடக்காரனுங்க மூக்கை அறுத்துவிடலாம், எலக்ஷன்லே. தெரியுமேல்லோ விஷயம், மிராசுதார், காங்கிரசிலே சேர்ந்தாச்சி......

காந்:—அவனுங்க மூக்கை அறுக்கப்போறயா...போடா, போ, விவரம் கெட்டவனே. மிராசுதாரைக் காங்கிரசிலே சேரவிட்டு, காங்கிரஸ் பேராலே. எலக்ஷனுக்கு நிற்கவைக்கறமே, அது ஒண்ணு போதாது நம்ம மூக்கு அறுபட! மனுஷன், நம்ம கட்சியை நாக்கிலே நரம்பு இல்லாம எப்படி எப்படித் திட்டினான், இப்ப, அவனுக்குப் போயி 'ஜே' போடணும், இல்லையா. மானங்கெட்ட பிழைப்பு, ரோஷமானங்கெட்ட பிழைப்பு.

சிவ:—நீ, பெரிய இலட்சியவாதி—காந்தி வாரிசு போயேன்... எலக்கு காங்கிரசு ஜெயிக்கணும் யாராவேணுமானா இருக்கட்டும், அவனோட முன்னாள் நடவடிக்கை ஏதுவாக இருந்தாலும் சரி, இப்ப அவன் ஐஞ்சுபத்து செலவழிக்கற யோக்யதைக்காரனா? அது தான் முக்கியம். எலக்ஷன்டா! தம்பி! எலக்ஷன்! பணம் செலவழிக்கணும். வெறும் தியா

கின்னு சொன்னு போதாது! தியாகிலைய நிற்கவைக்கறதுன்னு. நீ, போதும், ரத உற்சவத்தின்போது ரதத்திலே, காங்கிரஸ் கொடியைக் கட்டிவிட்டு நீ பட்ட தடியடியும் உன் மண்டையிலே ஒழுகிய இரத்தமும் எல்லாருக்கும் தெரியும். தெரிஞ்சா? பணம் வேணுமே பணம்!!

கா:—டேய்! சாத்வீகக் கொள்கையையும் மறந்து, இரண்டு அறை வைக்கலாம்னு கோபம் வருது, உன்பேச்சைக் கேட்டா. பணம் வேணுமா, பணம். கோடீஸ்வரன், சீமானெல்லாம், சாதாரணக் காங்கிரஸ் தொண்டனிடம் தோற்றிருக்காண்டா.......தெரியாதா........

சிவ:—அது, அப்பொ! அந்தக் காலம்டா, அந்தக் காலம்! காங்கிரசுன்னு அப்ப ஒரே மோகம் ஜனங்களுக்கு, பக்தி, செல்வாக்கு இருந்தது, மகிமை இருந்தது. காங்கிரசிலே வீரத் தியாகிகள் நிறைய இருந்த காலம். ஜெமீன்தாரனை எல்லாம் தோற்கடித்தோம். இப்ப முடியுமா......

கா:—அப்படின்னு, இப்ப காங்கிரசு மதிப்பிழந்து போச்சி—ஒத்துக்கறே — ஏண்டாப்பா அப்படித்தானே......

சிவ:—அதைச் சொல்வானேன்...... இப்ப எப்படியாவது சக்தியைத் தேடணும்........!

கா:—ஏண்டா, மடையா! காங்கிரசு செல்வாக்கு கெட்டுப் போச்சின்னு நீயே சொல்றே. இப்ப இந்த எலக்ஷனுக்காக வேண்டி காங்கிரசோட மானத்தைச்சந்தி சிரிக்கவைத்தவன், கள்ளமார்க்கட்காரன், கள்ளுக்கடை நடத்தினவன், கதரைத்தொட்டு அறியாதவன், இவனை எல்லாம் காங்கிரஸ் அபேட்சகனாக நிறுத்திவைத்து, கள்ளுக்கடை மறியல் செய்தவன், தடியடி பட்டவன், ஜெயிலிலே அடைபட்டுக் கிடந்தவன், தியாகம் செய்தவனெல்லாம், போய் வேலை செய்து, ஜெ போடணும், இல்லையா, ஏண்டா அப்பா, எலக்ஷன்! மானஸ்தன் செய்கிற காரியமா இது, தெரியாமத்தான் கேட்கறேன், மானஸ்தன் செய்கிற காரியமா?

★

தாசப்பன் தத்துவம்!

மன்னன் கேட்கிறான், "ஊர் நிலைமை எப்படி இருக்கிறது? மக்கள் சுகமாக இருக்கிறார்களா?" என்று. தைலம் தேய்க்கும் தாசப்பன் புன்னகையுடன் கூறுகிறான், "மகாராஜா! உங்க ஆட்சியிலே யாருக்கும் ஒரு குறையும் இல்லை. எல்லா மக்களும் சந்தோஷமாகவே இருக்கிறார்கள்!" என்று. மன்னனுக்கு ஒரே ஆச்சரியம் குறைகூறிக் கூறிப் பழக்கப்பட்டவன், வாழ்க்கைக் கஷ்டம், தொழில் கிடைக்காமை, கலகம் என்று, ஏதாவது ஒரு குறைதான் கூறுவதுவாடிக்கை, அப்படிப்பட்ட தாசப்பன் அன்று அகமும் முகமும் மலர நின்று, ஊரில் உள்ளவர்களுக்கு ஒரு குறையும் இல்லை என்று கூறினால், வேந்தன் ஆச்சரியப்படாமலிருக்க முடியுமா! என்ன மர்மம் இது என்று எண்ணி, மன்னன் மேலும் விசாரிக்கலானான். "தாசப்பா! என்னைச் சந்தோஷப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறாயா! வேண்டாம், உண்மையைச் சொல்லு! நீ, தைலம் தேய்த்துத் தேய்த்து என் மேனிக்கு மெருகேற்றி, என் உடல் வலியைப் போக்குகிறாய், அதுஒன்றுபோதும் என்னைச் சந்தோஷப்படுத்த, ஊர் எப்படி இருக்கிறது, உண்மையைச் சொல்லு" என்று மீண்டும் கிண்டினான். தாசப்பன், மேலும் உற்சாகத்துடன் சொன்னான், "மகாராஜா! சத்தியமாகச் சொல்கிறேன், சகல ஜனங்களும் சௌக்யமாக, ஒரு குறையுமில்லாமல், வாழுகிறார்கள். அதிகம் சொல்வானேன் அரசே! எவ்வளவு ஏழையாக இருந்தாலும், அவனிடம் கூட, ஒரு எலுமிச்சங்காய் அளவு பொன்னாவது இருக்கிறது" என்றான்.

அமைச்சனிடம் அரசன் சொன்னான் – பெருமையாக — அமைச்சன் மதிநுட்பம்படைத்தவன், எனவே சிரித்தான். மன்னன், சிரித்த காரணம் கேட்டான். "அரசே! அடுத்த சனியன்று, விளக்கம்" என்று கூறி விட்டுச் சென்றான்.

அமைச்சன் ஒற்றனிடம் பேசினான்—ஒற்றன், தாசப்பனின் அண்டைபக்கத்தாரை உசாவினான், விஷயம் தெரிந்தது, தாசப்பனிடம் எலுமிச்சங்காய் அளவுபொன் இருந்தது! அந்த அளவு பொன் இருந்ததால் அவனுக்கு மகிழ்ச்சி, தன்னோடு ஊர் தீர்ந்தது என்றஎண்ணம் அவனுக்கு. அவனுக்குமட்டுமா! தன்னைப்பற்றி மட்டுமே கவலை, ஊரைப்பற்றி ஏன் இருக்கவேண் வேண்டும் என்ற போக்கினர் பலப்பலர்!! தன்னிடம் பொன் இருக்கிறது, அந்தப் பூரிப்பில் ஊரெல்லாம் சுகம் என்று பொங்கினான் தாசப்பன். அமைச்சரின் திட்டப்படி, அந்த எலுமிச்சங்காய் களவாடப்பட்டுவிட்டது!! பறிகொடுத்த தாசப்பனை, துக்கம் கப்பிக்கொண்டது. சனி பிறந்தது,

---

சாற்றுவீர்!

வான்மும் புவியும்
அனைத்தையும் படைத்த
மட்டிலா சருவவல்லபத்தின்
மகத்துவ தேவன்
செகத்தினி லீனர்
வகுத்த மேனியில்
இருப்பானோ?
தானதா யிருந்தோன்
ஒருவனோ இரண்டோ
சாற்றுவீர் சாத்திரிமாரே!

—வேதநாயகம்

தைலம் தேய்க்கச் சென்றான். வேலையிலே சுறுசுறுப்பு இல்லை! முகத்திலே மலர்ச்சி காணோம்! பெருமூச்சு! மன்னன் வழக்கப்படி "தாசப்பா! ஊர் நிலவரம் என்ன?" என்று கேட்டார். "ஏன் கேட்கிறீர்கள் மகாராஜா! மக்கள் படுகிற கஷ்டம் சொல்லமுடியாது. வாயும் வயிறும் நிரம்புவதற்கே மாடுபோல உழைக்கவேண்டி இருக்கிறது. அதிகம் சொல்வானேன், அரசே! ஒரு குண்டுமணி அளவு பொன் கூடக்கிடையாது, ஏழையின் வீட்டில்" என்று ஆயாசத்துடன் தாசப்பன் சொன்னான். உரத்த குரலில் சிரித்தபடி, அமைச்சர், களவாடப்பட்ட பொன் உருண்டையைக் காட்டி, "மன்னா! தாசப்பனுடைய தத்துவம் இதிலேதான் அடங்கி இருக்கிறது. இது இருந்தவரையில், இவன் கண்ணுக்கு ஊர் சௌக்யமாக இருப்பதாகத்தெரிந்தது; இது மறைந்தது, உடனே ஊரேஇருண்டு கிடப்பது தெரிந்தது. இவ்விதம், தன் சுகத்தை மட்டுமே எண்ணி, அதையே " அளவு கோலாகக் கொண்டு, சிலர் ஊர் விஷயத்தை மதிப்பிடுவர், அவர் போன்றாரின் பேச்சு, மிக மிக ஆபத்தானது" என்று கூறினர்.

*

தாசப்பன் எங்கே இருக்கிறான் என்று கேட்பீர்கள். கதையில் உள்ளவனை நான் எப்படிக் காட்ட முடியும். நிஜ உருவில் வேறொருவர் இருக்கிறார், அவரைவேண்டுமானால் காட்டமுடியும்—நான் ஏன் காட்ட வேண்டும்-உங்கள் ஊரில் ஏதேனும் ஒரு மரம்நடு விழாவோ, மாரி கோயில் உற்சவமோ, மதகடி துவக்கமோ நடைபெறுமலா போகிறது, எதற்காவது ஒன்றுக்கு வருவார், பார்க்கலாம் — கனம். ராமசாமி அவர்களை. அவர்தான் இப்போது போகிற இடமெங்கும், காங்கிரஸ் மகத்தான கட்சி-நாட்டுக்கு ஏராளமான நன்மைகளை அந்தக் கட்சி தாராளமாகச் செய்கிறது—மக்களை நன்றாக வாழவைக்க அதுதான்ஏற்ற கட்சி—என்று பேசிவருகிறார். எல்லாம் தாசப்பன் தத்துவம், வேறொன்றுமில்லை! எலுமிச்சம்காய் அளவு பொன்!! அதுபோல இவருக்கு ஒரு மந்திரிப்பதவி கிடைத்தது! உடனே காங்கிரஸ் கட்சி, கரும்பாகிவிட்டது!! இவர் பதவி பெறுவதற்கு முன்புவரை, அந்தக் கட்சி, கிராதகக் கட்சி, வன்னியரை வாட்டி வதைக்கும் கட்சி, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப்புதைக்கும் கட்சி, டில்லிக்குக் காவடி தூக்கும் கட்சி,—இப்போது? — எலுமிச்சம் காய் அளவு பொன்!!—இனிப்பு, அவரால் தாங்கமுடியவில்லை!! பொன் உருண்டை பறிபோனதும் தாசப்பன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு, ஊரே சோகக் காடாக இருக்கிறது என்று சொன்னதுபோலத்தான் ஏதாவது ஓர் காரணத்தால், நேருபண்டிதருக்குக் கோபம் பிறந்தோ, சாடிகூறுவோர் வெற்றிபெற்றோ, அல்லது காமரா ருக்கே கசப்புஏற்பட்டோ, மந்திரி பதவி போய்விடுகிறது என்றுவை துக்கொள்ளுங்கள் (மாகாளி அருள் இருக்கிறது, மந்திரியார் பயப்பட தேவையில்லை!!) உடனே தாசப்பன் தத்துவம்தான், காங்கிரஸ் மிகமி மோசமான கட்சி, தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடும்; காரியம் முடிந்ததும் கீழேபோட்டு விடும், அதை நம்பவே கூடாது, வன்னியருக்கு பெரிய துரோகம் செய்கிறது, வாருங்கள் வாருங்கள், ஒரு கோழிக் குஞ்சுதாருங்கள், வளர்ப்போம்—என்று பேசுவார்!! எல்லாம் தாசப்பன் தத்துவம்!!

★

கோழைகள் பாதை

★

[த. வே. சீனிவாசன்]

வாழ்க்கையில் தோல்விகள் வந்தால்—விதி
வசமென்று காரணம் நீகொண்டு நொந்தால்
தேக்கிய வேதனை கொன்று—நலம்
சீர்பெற வெற்றிகள் நீபெறல் என்று?

காய்ச்சிய பால்கெட்ட தென்றால்—உண்மைக்
காரணம் ஏதென்று காணுதல் அன்றால்
பேச்சென்ன கேடுகள் நாளும்—மற்றும்
பிழைகளும் குறைகளும் பிரிவின்றி ஆளும்!

தப்பை முதலில்திருத்து!—நீ
தாழ்வதும் வாழ்வதும் அதனைப்பொருத்து!
சப்பைக்கட்டாலென்ன ஆகும்?—விதி
சாக்குகள் பேசிடில் வாழ்க்கைவீண் போகும்!!

பொறுப்புகள் மேற்கொள்ளும் வன்மை—தன்னைப்
புண்செய்து பொசுக்குதல் விதியதன் தன்மை!
வெறுப்புறை வாழ்க்கையே புன்மை—தலை
விதிச்சொல்லால் திறங்கெட்டு மதிசெத்தல் உண்மை!

காக்கை பனம்பழக் காதை—எனக்
கண்ணற்ற முடிவுகள் காண்பவன் பேதை!
நீக்குக வாழ்வினில் வாதை—விதி
நெஞ்சினில் கொள்ளுதல் கோழைகள் பாதை!

18. கொலையாளி அகப்படவில்லை!

இந்த மாய வழக்கில் மேற்கொண்டு விசாரணையை போலீஸார் ஆரம்பிக்கும் முன்பே நமது நிருபர்கள் பெரிய உண்மையை வெளியாக்கிவிட்டனர்.

இன்று காலை பாக்ய பவனத்திற்கு விஜயம் செய்த பத்திரிகை நிருபர்கள் ஆறுமுகத்தைப் பேட்டி கண்டு பேசிய பின், அவன் வாக்குமூலத்தில் நம்பிக்கைப் படாமல் மேற்கொண்டு, உத்தமநாதரின் ஒரே புதல்வர், பாஸ்கரோடு பேசிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் அங்கு ஓடிவந்த குப்பன் என்ற தோட்டக்காரன், பாக்கிய பவனத்தின் தோட்டத்தில் இருந்து கிடைத்ததாக உத்தமநாதரின் பூட்ஸ் ஒன்றைக் காண்பித்தான். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்ட பாஸ்கரும், நமது நிருபர்களும் அந்த பூட்ஸ் கிடந்ததாகக் கூறப்பட்ட மூங்கிற் புதர் அருகில் சென்றனர். அங்கே போன பிறகு தான் உண்மை தெரிய ஆரம்பித்தது. உத்தமநாதரின் பூட்ஸ் மாத்திரம் அங்கே கிடந்திருக்கவில்லை. அருகில் ஒரு மண்வெட்டியும் கிடந்தது. பக்கத்தில் இருந்த செடி கொடிகள் காய்ந்து கிடந்தன. அதற்கும் அப்பாலிருந்த இடத்தில் மண் தோண்டப்பட்டிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டதுமே, உத்தமநாதரின் மறைவுக்கு எப்படியோ, ஒரு தெளிவு கிடைத்தது.

"உத்தமநாதரைக் கொலை செய்து இந்த இடத்திலே யாரோ புதைத்திருக்கலாம்!" என்றார் நமது நிருபர்.

பாஸ்கர் நம்பவில்லை. ஆனாலும் எல்லோரும் "ஏன், அப்படி இருக்கக் கூடாது?". என்ற கேள்வியைக் கேட்டனர். எதற்கும் பார்த்து விடலாம் என்ற எண்ணத்தில் அங்கு கிடந்த உலர்ந்துபோன செடி, கொடிகளை அப்புறப் படுத்தினர்.

கீழே இருந்த பூமி, புதிய மண்ணால் மூடப்பட்டிருப்பதை கண்டவுடனேயே, நிச்சயமாக அந்த இடத்திலேதான் உத்தமநாதர் இருக்கின்றார் என்று முடிவு கட்டினர், நிருபர்கள். உண்மையும் அப்படித்தானிருந்தது!

உத்தமநாதரின் மார்பில் 8 இஞ்சு அகலமும் 6 இஞ்சு ஆழமுமான காயம் இருந்தது. தலையில் சில அடி காயங்கள் இருந்தன. இந்த சின்னபின்னத்தோடு அந்த இடத்தில் புதைக்கப்பட்டிருந்தது!

உடனே போலிசாருக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. இதற்குள் உத்தமநாதரின் ஒரே பெண் புஷ்பா, மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். பாஸ்கர் அழுத கண்களோடு உட்கார்ந்து விட்டார்.

நல்லமுத்துவை விடுவித்துவிட்டு வந்து சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் பாக்ய பவனத்தில் வெளியான விசித்திர சம்பவத்தைக் கண்டு திகைத்துப் போனார். தன்னுடைய இருபத்து ஐந்து வருட போலீஸ் வாழ்க்கையிலேயே இம்மாதிரி மர்மக் கொலையைக் கண்டதில்லை என்று கூறி விட்டு, ஆம்புலன்சுக்குப் போன் செய்தார்.

நல்லமுத்துவுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமில்லை என்றால், பின் யார் தான் குற்றவாளி?

இந்தக் கேள்வியைத் திருப்பித் திருப்பி நிருபர்கள் கேட்டனர். இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் பதில் கூற மறுத்துவிட்டார். ஆனால் அதே நேரத்தில் அங்கிருந்த குப்பனையும், ஆறுமுகத்தையும் கைது செய்ய உத்தரவிட்டார். சிலநிமிடங்களில் குப்பன் லாரியில் ஏற்றப்பட்டான். ஆறுமுகம் அந்த இடத்திலே காணப்படவில்லை! அப்பொழுதுதான் ஆறுமுகத்தின் கவனம் எல்லோர் கண் முன்பும் வந்தது.

ஆம்! அவனால் தானே, நல்லமுத்து கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டான். அவன் தானே, உத்தமநாதரைக் கடைசியாகப் பார்த்தவன்!

'பாக்ய பவனம்' பூராவும் தேடப்பட்டது. ஆறுமுகம் மறைந்து விட்டான்!

ஆறுமுகம்தான் இந்தக் கொலையில் முக்கியமான பாத்திரம் என்று கருதினார், ஆதிமூலம். அடுத்த வினாடி போலீஸ் லாரிகள் ஆறுமுகத்தைத் தேடிப் புறப்பட்டன.

உத்தமநாதர் எஸ்டேட் மானேஜரின் துணை கொண்டு ஆறுமுகத்தின் டிரஸ்ஸிங் ரூம், கார்ஷெட் எல்லாவற்றையும் சோதனை போட்டார். இன்ஸ்பெக்டர். என்ன ஆச்சரியம்! காரில் ஒரு முழு விஸ்கி பாட்டில் லேபில் கூட உடைக்கப்படாமல், டிரைவர் சீட்டின் அடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

அதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார் ஆதிமூலம்.

நல்லமுத்துவைப் பார்த்ததாகக் கூறி அவரை வீண் பழியில் இழுத்து விட்டதிலிருந்தும், கார் சீட்டினடியில் விஸ்கிபாட்டில் இருந்ததிலிருந்தும், ஆறுமுகம் உத்தமநாதரின் அழிவுக்கு நிச்சயமான காரணம் என்று நன்கு தெரிகிறது. உண்மையில் அவனே கொலை செய்திருக்கிறானா, அல்லது வேறு யாருடைய தூண்டுதலின் பேரில் செய்திருக்கிறானா என்பதும் தெளிவாக்கப்பட வேண்டிய விஷயம்.

இதோடு, இரண்டு நாட்களாகத்தான் ஆறுமுகம் வேலையில் அமர்த்தப் பட்டிருக்கிறான். ஆகவே அவனுடைய முன் தொடர்புகள், யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. இந்த நிகழ்ச்சி ஏதாவது அரசியல் நோக்கம் கொண்டதாக இருக்குமோ என்று நமது நிருபர், எஸ்டேட் மானேஜரைக் கேட்டபோது "அப்படி இருந்தாலும், ஆச்சரியப் படுவதிற்கில்லை. ஆறுமுகம், அவனாகவே கொலை செய்யுமளவு துணிச்சல் கொண்டவனாகத் தெரியவில்லை!" என்றார்.

உத்தமநாதரின் சவம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்யப்படுகிறது. இதற்கிடையில் போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

ஆறுமுகம் தப்பியோடிவிட்டான் என்ற போதிலும், அவனைப் பிடித்துவிட எல்லா ஏற்பாடுகளையும் போலீசார் செய்து விட்டனர் என்று தெரிகிறது. பாஸ்கர் கூட, ஆறுமுகத்தை உயிரோடு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம் தருவதாக அறிவித்திருக்கிறார்!"

இது வரைதான் ஆறுமுகத்தால் பொறுமையாக படிக்க முடிந்தது. அதற்குள்ளேயே அவன் கண்கள் பூத்துவிட்டன. நெற்றியில் வெளி வந்த வியர்வைத் துளிகள் ஒன்றுகூடி கீழே சொட்டாக விழுந்தன.

இந்தச் செய்திகளுக்கு அடியில் 'உத்தமநாதரின் வாழ்க்கை வரலாறு' என்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆறுமுகத்திற்கு அவர் வாழ்க்கையில் இனி என்ன கவலை?

தப்பித்துக்கொள்ள முடியாதவாறு மாட்டிக்கொண்டோமே என்ற வருத்தம் அவன் நெஞ்சை யடைத்தது. அவனா என்ன தவறு செய்தான். என்ன விசித்திரமான உலகம் இது! தாமாகவே இறந்து போன உத்தமநாதரை, அவன் ஏன் எடுத்துக் கொண்டுபோய் புதைக்க வேண்டும்? இந்த முட்டாள் தனமான எண்ணம் அவன் எண்ணத்தில் ஏன் உதித்தது? அப்பொழுதே பாஸ்கரையும், புஷ்பாவையும் கூப்பிட்டுக் காட்டியிருந்தால் அவன் தப்பித்துக் கொண்டிருக்கலாம். வீணாக, போலீசுக்குப் பயந்து தவறுமேல் தவறாக எத்தனை தவறுகள் செய்து விட்டான். இனி அவன் எப்படித் தப்பிப்பது?

ஆறுமுகத்திற்கு உடலெல்லாம் சுருங்கியது. நெஞ்சில் யாரோ கை வைத்து அமுக்குவதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. பக்கத்தில் பேரொலி எழுப்பிய கடலைவிட அவன் உள்ளத்தில் ஏற்பட்ட குமுறல் அதிகம்.

"ஐயோ! ஐயோ!!" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

அவன் ஐயோ ஐயோ என்பதற்கும், அந்த நேரத்திலே அங்கே ஒரு போலீஸ்காரன் வந்து நிற்பதற்கும் நேரம் பொருத்தமாக இருந்தது.

அழுத கண்களுடனேயே தலையை நிமிர்ந்து பார்த்த ஆறுமுகத்தின் கண்களில் போலீஸ்காரனின் வளர்ந்த உருவம்தான் தென்பட்டது

அந்த போலீஸ்காரன் என்ன கூறுகிறான் என்றுகூட அவன் காதில் விழவில்லை. ஆனால் ஏதோ உரக்கக் கத்துகிறான் என்று மாத்திரம் பட்டது. உடனே எழுந்து ஓடினான், ஆறுமுகம். ஐயோ, அதற்குள்ளாகவே, தன்னைக் கண்டு பிடித்து விட்டார்களே என்ற பயம் வந்தது ஆறுமுகத்திற்கு.

அவன் ஓடியதைக் கண்டதும், அவன் பின்னாலேயே போலீஸ்காரனும், சிறிது தூரம் ஓடி வந்தான். அவன் கூறியது முதலில் ஆறுமுகத்தின் காதில் விழவில்லை. கொஞ்ச தூரம் போனவுடன்தான் போலீஸ்காரன் 'பேப்பர், பேப்பர்!' என்று கத்திக்கொண்டு ஓடிவந்தான் என்று தெரிந்தது. ஆனால், அந்த பேப்பருக்காகத் திரும்பப்போனால், ஒரு வேளை அந்த நேரத்தில் அவனை அடையாளம் கண்டுகொண்டால், அவன் கதி என்ன ஆவது? ஆகவேதான் பேப்பர் போனாலும் போகிறது என்று நேராக மரினா ரோட்டிலேயே ஓடிக்கொண்டிருந்தான், ஆறுமுகம்.

திருவல்லிக்கேணி கடற்கரையைத் தாண்டியதும்தான், ஆறுமுகம் ஓட்டத்தை நிறுத்தினான்.

இனிமேல் அவன் எங்கு ஓடுவது? பகல் சாப்பாடுகூட சாப்பிடவில்லை. காலை பலகாரம் சாப்பிட்டதுதான்.

வயிறு, கப கபவென்று எரிய ஆரம்பித்துவிட்டது. இனிமேல் அவனால் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாத பசி ஏற்பட்டது. பையைத் தடவினான். சில்லறைகளைத் தேடி எடுத்தான். எட்டணா கூடத் தேறவில்லை. இனிமேல் மூன்று நூறு ரூபாய் நோட்டுகள் தான் இருக்கின்றன!

அந்த நோட்டுகளை எங்கேபோய் மாற்றமுடியும்? அவன் பத்துரூபாய் நோட்டு எடுத்துக்கொண்டு போனாலே கடைக்காரர்கள் சந்தேகப்படுவர்! இப்பொழுது நூறு ரூபாய் நோட்டுகளை எங்கே எடுத்துப் போவது? கடைத்தெரு பக்கம் போவது இனி ஆபத்தானது.

இந்த எண்ணத்திலேயே கொஞ்ச தூரம் நடந்து போய்க்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் லேடி வெல்லிங்டன் கல்லூரி அருகில் வந்துவிட்டான். அவனுக்கு அவசியமான உணவு அந்த இடத்திலே இருந்தது. அந்த இடத்திலிருந்த சேரிக்கு, வியாபாரம் செய்ய அங்கு உட்கார்ந்திருந்தாள், கிழவி ஒருவள்.

பக்கத்திலிருந்த சேரி வாழ்வோர் பலர் கூடி அந்தக் கிழவியிடம் சோறு வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். ஆறுமுகமும் மெதுவாகப்போய் அந்தக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டான். நாலணா கொடுத்து ஒரு பட்டைச் சோறு

வாங்கினான். எல்லோரும் கலகலவென்று பேசிக்கொண்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, அவன் மாத்திரம் மௌனமாக சோற்றைக் கையில் ஏந்தியவண்ணம் ரோடின் ஓரடிக்குப்போய் உட்கார்ந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தான்.

தன்னை யாரும் அடையாளமே தெரிந்துகொள்ளவில்லையே என்ற திருப்தியில் கொஞ்சம் தைரியமாகவே சாப்பிட ஆரம்பித்தான் ஆறுமுகம்.

ஆனால், முதல் கவளம் போட்ட மறு வினாடியே, 'ஆறுமுகமாங்கிறே ......'' என்ற சொல் கேட்டுத் திரும்பினான்.

அவனுக்குச் சிறிது தூரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த மூன்று மனிதர்களும், எதையோ வெகு ஆவலோடு பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சம்பாஷணையில், தன் பெயர் ஏன் வந்தது என்று ஆறுமுகத்திற்கு முதலில் பயம் வந்தது.

"நாம் ஒருவன்தான் ஆறுமுகமா .....'' என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு மறுபடியும் ஒரு கவளம் சோற்றை வாயில் போட்டான். அதற்குள் அவனுடைய காதில் மற்றொரு வெடிச்சப்தம் விழுந்தது.

"பாவி, கொலையைப் பண்ணிட்டு கச்சிதமா புதைச்சுட்டானாம்......'' என்றான், அந்த மூவரில் ஒருவன்.

ஆறுமுகத்திற்கு உடனே விஷயம் விளங்கிவிட்டது. அவனைப்பற்றித்தான் அங்கு பேசிக்கொள்கின்றனர். மெதுவாக நகர்ந்து அவர்கள் பேசுவதைக் காது கொடுத்து கேட்க ஆரம்பித்தான்.

"இவனை வேலைக்கு சேர்த்தே இரண்டுநாள்கூட ஆகலையாம். அதற்குள் பையன் குடிச்சுட்டு, மயக்கத்திலே ஆளையே கொலை செய்துட்டானாம்!''

"சரியான குடிபோலிருக்கு. அப்படித்தானிருக்கட்டும். ஏன் ஆளைக் கொலை செய்யணும்? செய்தால்தான் ஏன் கொண்டுபோய் புதைக்கணும்? இவ்வளவையும் பண்ணிவிட்டு, இப்ப ஓடிட்டானாமே, எங்கேபோய் தப்பித்துக்கொள்ளப் போறானாம்?!'

"ஹூம்......எங்கே போறது. மில்லுகார குடும்பம் சின்னதா என்ன? சர்க்காரே இவங்க தயவில் தான் நடக்குதாம். இனிமேல் எங்கே தப்பறது'' என்றான் ஒருவன்.

இதற்கு மேல் ஆறுமுகத்தால் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. சாப்பாட்டை எடுத்துக் கொண்டு எதிர் நடைப் பாதைக்குப் போனான். சாப்பிட்டுவிட்டு அங்கேயே படுத்தான். பட்டணம் பூராவும் அவன் கதை தெரிந்துவிட்டது. இல்லையேல், இந்த சேரி ஜனங்களுக்குக்கூட எப்படி தெரிந்து விட்டிருக்கும்?

''குடித்து விட்டு கொலை செய்து விட்டேனாமே!'' என்று தலையைத் தரையில் மோதிக்கொண்டான், ஆறுமுகம். கடற் காற்றின் குளிர் சில்லென்று அவன் காதுகளில் அடித்தது. இருந்தாலும் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட வெப்பம் தணியவில்லை.

திரும்பத்திரும்ப அவன் மனதில் அவனுடைய தவறுதல்கள்தான் ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தன. "குடிகாரன்—கொலைகாரன்! இரண்டு பட்டங்கள் அவனுக்குக் கிடைத்துவிட்டன. இந்தமாதிரிபட்டங்கள்வருமென்று அவன் கனவில் கூட எண்ணவில்லை. உத்தமநாதரை புதைக்கும்போதுகூட அவரைக் கொலை செய்ததாக எங்கே தன் மீது குற்றம் சுமத்தி விடுவார்களோ என்று பயந்துதான், புதைத்தான். ஆனால் அதன் பலன் அவனுக்கு 'கொலைகாரன்' என்ற பட்டம் கிடைத்ததுதான்.

திரும்பத் திரும்ப அவன், தன் வாழ்க்கையில் கடந்துபோன நாட்களை நெஞ்சில் கொண்டுவந்து நிறுத்திப் பார்த்தான்.

எந்தத் தவறுதலையும் ஏன் செய்தோம், என்ற விளக்கமே அவனுக்குக் கிடைக்கவில்லை. "ஏதோ, அவனுக்குத் தோன்றியதை அவன் இதுவரை செய்து வந்திருக்கிறானே தவிர, தன்னுடைய செயல் எதற்கும் காரண, காரணம் பார்த்து அவனால் செய்ய முடிந்ததில்லை. "எதற்காகச் செய்கிறோம், எப்படி செய்யவேண்டும்?'' என்ற எந்த விளக்கத்தையும் அவன் மனம் அலசியதில்லை. அலசிப் பார்க்கும் அளவு அவனுக்கு மன வளர்ச்சி இல்லை. ஏதோ பிறந்தோம் நினைத்ததைக்கூட அல்ல; மனதில் தோன்றியதைச் செய்துவிட்டு வாழ்வதுதான் முறை என்ற அளவில் தான் அவன் வாழ்க்கை இதுவரை கடந்திருக்கிறது. தத்துவ ஆசிரியர்கள் கூட புரிந்துகொள்ள முடியாத மனித வாழ்க்கையை, ஆறுமுகத்தால் எங்கே புரிந்துகொள்ள முடியும்?

ஒரே குழப்பத்தில் தூங்கிவிட்டான்.

காலையில் அவன் விழித்துப் பார்க்கும்போது ஏழுமணி இருக்கும். சூரிய வெளிச்சம் நடைபாதை பூராவும் சுரீரென்று அடித்துக் கொண்டிருந்தது. எழுந்து உட்கார்ந்தான். அவனுடல் பழைய மாதிரி இல்லை. வலுவற்று, தலையெல்லாம் ஒரே கனமாக இருந்தது. கடற் காற்றில் படுத்திருந்ததின் பலன்போலும்!

எழுந்து பக்கத்திலிருந்த குழாயடிக்குப்போய் முகத்தைக் கழுவிக் கொண்டு மறுபடியும் தெரு முனைக்கே வந்தான்.

நேற்றிரவு சோறு விற்ற அதே கிழவி, இட்லி விற்றுக்கொண்டிருந்தாள்.

பையைத் தடவிப் பார்த்தான். மீதி மூன்றரை அணாதான் கிடந்தது. இன்று காலையும் பத்திரிகையை அவன் படித்தாகவேண்டும். அதற்காக ஒரு அணா வைத்துவிட்டால்கூட மீதி இரண்டரை அணாவுக்குத்தான் அவன் இட்லி சாப்பிடமுடியும்.

கிழவியிடம்போய் இட்லி வாங்கிக்கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான். நேற்றிரவுமாதிரியே அந்த இடத்தைச் சுற்றிலும், பலர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், இன்று காலை அவனைப்பற்றி யாரும் பேசிக்கொள்வதாகத் தெரியவில்லை.

சாப்பிட்டு முடித்தவுடன் மறுபடியும் திரும்பி மரினா ரோடில் நடக்க ஆரம்பித்தான், ஆறுமுகம். பீடி இல்லாமல், இட்லியின் ருசியை ரசிக்க அவனால் முடியவில்லை. கிழவி

கொடுத்த பழைய சாம்பாரின் கசப்பு வாயில் இருந்தபடியே இருந்தது.

திருவல்லிக்கேணி அருகில் வரும் போது மற்ற எண்ணங்கள் எல்லாம் எங்கோ ஓடிவிட்டது. பழையபடி, இன்று காலை பேப்பர் என்னென்ன புதிய விஷயங்களைத் தரப்போகிறதோ என்ற பயம்தான் அதிகமாகியது.

மரினாவிலே பைகிராப்ட்ஸ் ரோடினருகில் வந்தான். பத்திரிகை வாங்கிவிட்டுத்தானே மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும்.

நேராக பைக்ராப்ட்ஸ் ரோடில் நுழைந்தான். அப்பொழுதுதான் அவனெதிரில் விர்ரென்று ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு ஜீப்கார்கள் உருண்டோடின! இரண்டு காரிலும் போலிஸ் இன்ஸ்பெக்டர்களும், கான்ஸ்டேபிள்களும் அமர்ந்திருந்தனர். கார்கள் போனவேகம், ஆறுமுகத்தை ஒரு கணம் திகைக்க வைத்துவிட்டது. நடைபாதை ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டான். அந்த ஆயாசத்திலிருந்து தீருவதற்குள் பேப்பர் பையன் "தினமித்திரன்!...காலைச் செய்தி!......மெட்ராஸ் டைம்ஸ்!......" என்று கூவிக்கொண்டே ஓடினான். ஆறுமுகம் சட்டென்று "இந்தாப்பா..."என்று கூச்சல் போட்டான்.

"என்ன, காலைச் செய்தியா!" என்று கூறிக் கொண்டே ஒன்றை எடுத்து நீட்டினான் பையன், பேசாமல் ஒரு அணாவை எடுத்து அவனிடம் கொடுத்த வண்ணமே பத்திரிகையை வாங்கினான், ஆறுமுகம்.

பையன் பைக்ராப்ட்ஸ் ரோடிற்குள் ஓடினான். அவன்ஓடும்பொழுது "உத்தமநாதர் கொலை வழக்கு—புதிய செய்திகள்!" என்று சப்தம் போட்டுக்கொண்டே ஓடியது ஆறுமுகத்தின் காதில் விழாமலில்லை. ஆகவேதான் ஆறுமுகமும் அவசரம் அவசரமாக பத்திரிகையை எடுத்துக் கொண்டு பீச்சை நோக்கி ஓடினான்.

காலை நேரத்திலே பீச்சிலே யார் இருப்பார்கள்? யாரோ சில பெரிய மனிதர்களும், நடந்தால் சதை குறையுமே என்று கூறியதால் காரை விட்டு இறங்கி 'வாக்கிங்' செய்து கொண்டிருந்த கனத்த சீமாட்டிகளும்தான் போய்க்கொண்டிருந்தனர்.

பத்திரிகையை கையில் எடுத்த வண்ணம் இரும்பு வாராவதியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான் ஆறுமுகம். பக்கத்திலே போலையைக் கிளப்பும் கடல், குழக்கே மௌனமாக தேங்கி நிற்கும் கூவம். அதையும் வேகமாகக் கடந்து போர் வீரர்கள் நினைவுச் சின்னத்தருகில் வந்து சேர்ந்தான். எத்தனையோ இலட்சக்கணக்கான பேர் இறந்ததின் நினைவாகக் கட்டப்பட்டபோதிலும், அன்று காலை அந்த இடத்திலே யாருமே இல்லை. தன்னந்தனியாக கடலின் காற்றை சுவாசித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தது, அந்த மண்டபம்.

அதன் மறைவில் வந்து அமர்ந்தான், ஆறுமுகம். தன்னை, ரோடில் போவோர்கள் கண்டுபிடிக்க முடியாது என்பதை நன்றாக பார்த்துக் கொண்டவுடன், தைரியமாக பேப்பரைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

"சேரி வாழ்வோன் செய்த கோரக் கொலை!"

"உத்தமநாதரின் உயிரைப் பறித்தவன் இன்னும் அகப்படவில்லை"

"கண்டுபிடிப்பவர்க்கு ஆயிரம் ரூபாய் இனாம்!"

"போலிஸ் இன்ஸ்பெக்டரின் அறிக்கை"

"கொலைக்குக் காரணம் என்ன?"

"அரசியல் அக்கிரமமா; அறிவிலியின் ஆத்திரச் செயலா?"

என்ற கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டிருந்தன 'காலைச் செய்தி'யின் தலைப்புகள். கீழே சிறிய எழுத்தில் செய்தி ஆரம்பித்தது.

"நகரின் பிரமுகர் உத்தமநாதரின் கொலைவழக்கில்: முதல் குற்றவாளியான 'ஆறுமுகம்' என்ற அவர் கார் டிரைவர் இன்னும் அகப்படவில்லை.

போலிஸ் இலாகாவில் இதுபற்றி எந்தவிதமான தகவலும் வந்துசேரவில்லையாம் ஆனால் நகரைவிட்டு புறப்படும் ரயில், பஸ் முதலிய பிரயாண சாதனங்களிலிருந்து, நகரிலிருந்து வெளியே செல்லும் அத்தனை ரோடுகளிலும் போலிஸார் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த வழக்கு சம்பந்தபட்ட பூரா விஷயங்களையும் கவனித்து உடனே முடிக்கும் நோக்கத்துடனும் கொலையாளி தப்பித்துப் போகாமலிருக்கவும் சுமார் நூறு பேரடங்கிய துப்பறியும் குழுவுடன் ஒரு உதவி போலிஸ் கமிஷனர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய திட்டப்படி நகர் பூராவும் போலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

சென்னையின் சேரிகள், பாழடைந்த கட்டிடங்கள், பார்க்குகள், ரயில் பாதையோரங்கள், எல்லாம் நேற்றிரவு போலிஸாரின் சோதனைக்கு ஆளாயின.

'ஆறுமுகம்' போலவே இருபத்திநாலுபேரை கோடம்பாக்கம், சூளை, சைதாப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, உத்தமநாதபுரம் முதலிய சேரிகளிலிருந்து பிடித்து வந்திருக்கின்றனர் போலீசார்.

மைலாப்பூர், மாம்பலம் முதலிய இடங்களில் வசிப்போர் சேரிவாழ்வோர் தெருவில் நடமாடுவதைக் கூட எதிர்த்து போலிசாரிடம் போய் புகார் செய்திருக்கின்றனர்.

ஜார்ஜ் டவுனில் பல வீடுகளில் தாங்கள் வைத்திருந்த சேரிவாழும் வேலைக்காரிகளை வேலையிலிருந்து நிறுத்தியிருக்கின்றனர். சில இடங்களில் தங்களிடமிருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த டிரைவர்களைக்கூட வேலைக்கு வரவேண்டாமென்று கணக்குத் தீர்த்து அனுப்பியிருக்கின்றனர்.

நகரெங்கும் இதே பேச்சு!

ஆனால் இன்னும் கொலையாளி அகப்படவில்லை!

[தொடரும்]

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
85, Tirukkachinambi St., Kancheepuram.